# திருமலைத்தீபம்
## Thirumalaitheepam

தீபம் – 88 ஆவணி – 2024 இல. 297, கடற்படைத்தள வீதி, திருகோணமலை Email: theepamlink@gmail.com TP: 026 222 1022/ 026 205 4362 Rs. 60/=

## இறையேசுவில் அன்புள்ள சகோதர சகோதரிகளே,

## இயேசுவின் பெயரால் உங்கள் அனைவருக்கும் நல்வாழ்த்துக்கள்.



மே மாதம் திடீரென இருதய சத்திரசிகிச்சைக்காக கொழும்பு செல்லவேண்டி இருந்தது. செய்தியைக் கேட்டு எனது உடல் நலனுக்காக செபித்த குருக்கள், இருபால் துறவிகள், பொதுநிலை நம்பிக்கையாளர்கள் அனைவருக்கும் எனது உளம் நிறைந்த நன்றிகள். எனது உடல் பூரண குணமடைய தொடர்ந்து செபிக்கும்படி அன்போடு கேட்டுக்கொள்கின்றேன்.

யூன் மாதம் புனித அந்தோனியோர் ஆலயத் திருவிழாக்களில் அனேகர் ஈடுபட்டோம். யூலை மாதம் சில திருவிழாக்கள், செயல்பாடுகள். 16ம் திகதி கார்மேல் அன்னையின் திருவிழா. கார்மேல் மலையில் ஓர் சிறப்பான ஆச்சிரமம் (மடம்) உள்ளது. இதன் பெயர் 'ஸ்டெல்லா மாரிஸ்.' கார்மேல் மலை பழைய ஏற்பாட்டுக் காலத்தில் எலியா இறைவாக்கினரோடு தொடர்புடையது. இங்குதான் எலியா 450 போலிக் கடவுள் பாகாலின் இறைவாக்கினர்களை எதிர்கொண்டு இஸ்ரயேலின் இறைவனே உண்மைக் கடவுள் என்பதை நிரூபித்தவர். இதைத் தொடர்ந்து இறைவாக்கினர் எலிசாவும் பல சீடர்களும் இந்த ஆச்சிரமத்தில் வாழ்ந்து வந்தனர். அன்னை மரியாவுக்கு அர்ப்பணிக்கப்பட்ட இம்மலை காலப்போக்கில் புகழ்பெற்று விளங்கியது. கார்மேல் அன்னை கார்மேல் சபையின் பாதுகாவலியாக உள்ளார். எமது மறைமாவட்டத்தில் கார்மேல் சபை அருட்சகோதரிகள் திருகோணமலையிலும் மூதூரிலும் பணிசெய்கின்றார்கள். கல்வி, ஆற்றுப்படுத்தல், பங்குப்பணி என பல பணிகளிலும் ஈடுபடும் இவர்களுக்கு எமது திருவிழா வாழ்த்துக்கள்.

**அதிவணக்கத்திற்குரிய ஆயர் கிறிஸ்டியன் நோயல் இம்மானுவேல்**

➡ 2

## வாழ்த்துகிறோம்



திருகோணமலை நிலாவெளி புனித சூசையப்பர் ஆலய பங்கைச் சேர்ந்த கிருபைதாஸ் டலக்ஷி பேராதனைப் பல்கலைக் கழகத்தினால் வழங்கப்படும் இளங்கலை மானிப்பட்டம் (BA) பெற்றுள்ளார். இவர் திருகோணமலை மறைக்கல்வி நடுநிலையத்தில் கணினிப்பிரிவில் பணிபுரிகின்றார்.

இளம் சமுதாயம் தங்கள் கல்வி நிலையை மேம்படுத்த எடுக்கும் முயற்சியை நாம் பாராட்டியே ஆக வேண்டும். கத்தோலிக்க மாணவ, மாணவிகள் கல்வியில் அக்கறை காட்டி பட்டம் பெற்று நல்ல தொழில் வாய்ப்புக்களைப் பெற வேண்டும் என திருமலைத்தீபம் வாழ்த்துகிறது.



இந்தியா கோவா மாநிலத்தில் யூன் 11 - 15 ஆம் திகதிகளில் இடம்பெற்ற மறைக்கல்வி நடுநிலைய இயக்குனர்களுக்கான பயிற்சிக் கருத்தமர்வில் இலங்கையைச் சேர்ந்த மறைக்கல்வி நடுநிலைய இயக்குனர்கள் அனைவரும் கலந்து கொண்டனர்.

## தேசிய ரீதியிலான திருவிவிலிய அறிவுப்போட்டி













மறைக்கல்வி மாணவர்களுக்கான தேசிய ரீதியிலான திருவிவிலிய அறிவுப் போட்டி திருகோணமலை புனித மரியாள் கல்லூரியில் 20.07.2024 சனிக்கிழமை நடைபெற்றது. இப்போட்டியில் தமிழ், சிங்களம், ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளிலும் திருகோணமலை மறைமாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட 290 மாணவர்கள் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

# திருத்தந்தையின் செய்தி



**நமது எளிய அன்பினைக் கடவுளுக்குக் கொடுப்பவர்களாக இருப்போம்.**

நாம் ஒவ்வொருவரும் நமது எளிய அன்பினைக் கடவுளுக்கு கொடுப்பவர்களாக இருக்கவேண்டும். பாவிகளாகிய நமது அன்பு மிகச்சிறியதாக இருந்தாலும் அதனை இறைவனுக்கு நாம் வழங்க வேண்டும். அவர் அதனை ஏற்றுக்கொள்வார்.

யூலை 28ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை தூய பேதுரு பெருங்கோவில் வளாகத்தில் கூடியிருந்த மக்களுக்கு வழங்கிய ஞாயிறு உரையின்போது இவ்வாறு கூறினார். அப்பம் பலுகுதல் என்னும் நற்செய்தி பகுதியில் 5 அப்பங்களையும் இரண்டு மீன்களையும் ஐயாயிரம் பேருக்கு பகிர்ந்தளித்த நிகழ்வானது காணிக்கையாக்குதல், நன்றி கூறுதல், பகிர்தல் என்னும் இறுதி இராவுணவின்போது இயேசு செய்த மூன்று செயல்களை அடையாளப்படுத்துகின்றது என்று திருத்தந்தை பிரான்சிஸ் கூறியுள்ளார்.

**காணிக்கையாக்குதல்**

நற்செய்தியில் வரும் ஐந்து அப்பங்கள் மற்றும் இரண்டு மீன்கள் கொண்ட சிறுவன் நம்மிடம் இருக்கும் நல்லவற்றைப் பிறருக்குக் கொடுக்க வேண்டும். தேவைப்படுவதை விட குறைவாக அது நம்மிடம் இருந்தாலும் அதனை பிறருக்குக் கொடுக்க நாம் "ஆம்" என்ற மனநிலை உடையவர்களாக வாழ வேண்டும் என்பதை அடையாளப்படுத்துகிறான் என்றும் கூறினார் திருத்தந்தை.

இச்செயலானது திருப்பலிக் கொண்டாட்டத்தின்போது குருவானவர் பீடத்தில் உள்ள அப்ப இரசத்தை அர்ப்பணிக்கும் போது ஒவ்வொருவரும் நம்மையே நாம் அர்ப்பணிக்க வலியுறுத்துகிறது. பல்லாயிரக் கணக்கான கூட்டத்திற்கு உணவளித்தல் என்பதற்கு முன்பு 5 அப்பம் 2 மீன் சிறிய அளவாகத் தோன்றினாலும் கடவுள் சிறியவற்றில் இருந்து ஆச்சரியமூட்டும் அதிசயங்களைச் செய்ய வல்லவர் என எடுத்துரைத்தார்.

**நன்றி செலுத்துதல்**

இயேசு அப்பங்களை எடுத்துக் கடவுளுக்கு நன்றி செலுத்தி அமர்ந்திருந்தோருக்குக் கொடுத்தார் என்னும் இறைவார்த்தைகள் இயேசு இறைவனுக்கு நன்றி கூறும் செயலை மனத்தாழ்ச்சி மற்றும் அன்புடன் செய்தார் என்பதை எடுத்துரைக்கின்றன. இறைவா என்னிடம் இருப்பதெல்லாம் நீர் எனக்குக் கொடுத்த கொடை இயேசு வழியாக நீர் எனக்குக் கொடுத்த அன்பையும் என்னால் இயன்றதையும் மட்டுமே உமக்குத் திருப்பியளித்து நன்றி செலுத்த முடியும் என்ற மனநிலை கொண்டவர்களாக நாம் வாழ வேண்டும் என்றும் வலியுறுத்தினார் திருத்தந்தை.

**பகிர்தல்**

திருப்பலியின் திருவிருந்துப் பவனியின் போது கிறிஸ்துவின் திருஉடலையும் திருஇரத்தத்தையும் பெற்றுக்கொள்ள பலிப்பீடம் நோக்கி நாம் செல்லும்போது ஒன்றிணைந்து செல்கின்றோம் என்றும் இது நமக்காக தன்னையே கையளித்த இயேசுவின் பகிரும் குணத்தின் பலன் எனவும் கூறினார்.

மிகவும் அழகான தருணமான இந்த திருவிருந்துப் பகுதியானது கொடுப்பவர் பெறுபவர் இருவருக்குமிடையே அன்பின் ஒவ்வொரு அடையாளத்தையும் இறைவனின் அருளாகப் பார்க்கக் கற்பிக்கின்றது. இறையருளால் என்னிடம் இருப்பதை என் உடன் சகோதர சகோதரிகளுக்குக் கொடுப்பதற்கு என்னிடம் தனித்துவமான ஒன்று இருப்பதாக நான் உண்மையிலேயே நம்புகிறேனோ அதைக் கொடுக்கத் தயாராக இருக்கின்றேனா? அல்லது உதவ விருப்பம் இல்லாதவர் போல் இருக்கின்றேனா? என்று நமக்குள் கேள்வி எழுப்ப வலியுறுத்திய திருத்தந்தை அவர்கள், என்னிடம் தனது அன்பை வெளிப்படுத்தும் கடவுளுக்கு நான் நன்றியுள்ளவனாக இருக்கின்றேனா? உரையாடல், சந்திப்பு, இணக்கம் கொண்டு பிறருடன் பகிர்ந்து வாழ்கின்றேனா? என்று சிந்தித்துப் பார்க்கவும் அழைப்புவிடுத்தார்.

திருவிருந்துக் கொண்டாட்டத்தை நம்பிக்கையுடன் வாழவும் இறையருளால் ஒவ்வொரு நாளும் நடக்கும் அற்புதங்களை சுவைக்கவும் கண்டுகொள்ளவும் அன்னை மரியா நமக்கு உதவுவாராக. என தனது உரையை நிறைவுசெய்தார் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள்.

**வத்திக்கான் செய்தி**

### ஆயரின் செய்தி தொடர்ச்சி...

25ஆம் திகதி புனித யாகப்பர் திருவிழா. இயேசுவின் சிறப்புச் சீடராக அழைக்கப்பட்ட இவர் இயேசுவின் இறப்பிற்குப்பின் அவரது செய்தியை மக்களுக்கு அறிவிக்க தன்னை அர்ப்பணித்தவர். இவரது பெயரில் வெல்வெரியில் ஆலயம் உள்ளது. வயல் நிலங்கள் சூழ்ந்த இந்த இடத்தில் ஆடி 27ஆம் திகதி சனிக்கிழமை சிறப்புத் திருப்பலியும் நிகழ்ச்சியும் நடைபெறும். அனைவரும் கலந்துகொள்ள அழைக்கின்றோம்.

ஆடி 28ஆம் திகதி சுதேச குருக்கள் ஞாயிறு. தேவ அழைத்தல்கள் பற்றி சிந்தித்துச் செயற்பட சிறப்பான நாளாகும். எமது மறைமாவட்டத்திற்கு இரு சகோதரர்கள் யாழ்ப்பாணத்தில் இறையியல் கல்வி கற்கின்றனர். சிறிய குருமடத்தில் சிறிய எண்ணிக்கையில் மாணவர்கள் தம்மை ஆயத்தம் செய்கின்றனர். மறைமாவட்டத்தில் தேவ அழைத்தல்கள் இல்லையா? அல்லது நாம் முயற்சிகள் செய்யவில்லையா? என சிந்தித்துச் செயற்பட வேண்டும். உலகம் சார்ந்த கவர்ச்சிகள் அதிகமாக இருக்கும் இக்காலத்தில் குடும்பங்களில் செபமாலை, ஆலயங்களில் தேவ அழைத்தலுக்கான செபம் என்று பல வழிகளில் நாம் முயற்சிகள் செய்யவேண்டும். திருப்பாலத்துவ சபைகள், மறைக்கல்வி, பீடப்பணியாளர் என எமது பிள்ளைகள் எம்மைச் சுற்றியே உள்ளனர். இவர்களை வழிநடத்த நாம் பங்குச் சமூகமாக செயற்பட வேண்டும்.

ஆடி 31ஆம் திகதி புனித லொயோலா இஞ்ஞாசியார் திருவிழா. இறைவனின் அழைப்பு விசித்திரமானது, மனித சிந்தனையால் புரிந்துகொள்ள முடியாதது என்பதற்கு திருஅவையின் வரலாற்றில் பல உதாரணங்களைக் காணலாம். புனித பவுல், புனித பிரான்சிஸ் அசிசியார், புனித அந்தோனியார், புனித லொயோலா இஞ்ஞாசியார் போன்றோர் சில உதாரணங்கள். செல்வம், செல்வாக்கு, வீரம் என்று மார்தட்டி வாழ்ந்த இஞ்ஞாசியாரை இறைவன் தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்து அழைத்தலுக்கான சிந்தனையை ஊட்டினார். குழுக்களுக்கிடையே நடைபெற்ற போர் ஒன்றில் அடிபட்டு ஒரு காலை இழந்து வழிதெரியாமல் இருந்த நிலையில் விவிலியத்தையும் புனிதர்களின் வாழ்க்கை வரலாற்றையும் வாசிக்க சந்தர்ப்பம் கிடைத்தது. இதுவே இவரது வாழ்வில் திருப்புமுனையாக அமைந்தது. இவர் தன் தோழர்களோடு இணைந்து இயேசு சபையை உருவாக்கினார். இன்று இயேசு சபையினர் உலகெங்கும் வியாபித்து கல்வி, சமூகப்பணி, சமூக நீதி, மனித உரிமை போன்ற பணிகளில் ஈடுபடுகின்றார்கள். மூன்று வருடங்களுக்கு முன்பு இந்தியாவில் அருட்பணி. ஸ்டனிஸ்லாஸ் லூர்துசாமி எனும் இயேசு சபைத்துறவி தலித் மற்றும் ஆதிவாசி சமூகத்திற்காக உழைத்து குரல் கொடுத்த காரணத்திற்காக கைது செய்யப்பட்டு சிறையிலேயே இறந்தார். இறக்கும்போது இவருக்கு வயது 84.

எமது மறைமாவட்டத்தில் இயேசு சபைக் குருக்கள் பல வருடங்களாகப் பணியாற்றி வருகின்றார்கள். கல்வி, சமூகப் பணி, ஆற்றுப்படுத்தல், பங்கு பணித்தளம் போன்ற பணிகளில் ஈடுபடும் எமது இயேசு சபைக் குருக்களுக்கு எமது பாராட்டுக்களும் வாழ்த்துக்களும்.

இறைவேண்டல் ஆண்டில் இறைவேண்டல் செய்வதற்கு வரக்கூடிய ஒவ்வொரு சந்தர்ப்பங்களையும் முறையாகப் பயன்படுத்தி ஆன்மீகத்தில் வளர்வோம். இறைவன் உங்களை என்றும் ஆசீர்வதிப்பாராக.

# சீனக்குடா புனித அந்தோனியார் ஆலயத் திருவிழா



சீனக்குடா புனித அந்தோனியார் ஆலயத் திருவிழா 21.06.2024 ஆம் திகதி மாலை 5.00 மணியளவில் பங்குத்தந்தை அருட்பணி. தேவசீலன் CMF மற்றும் உதவிப் பங்குத்தந்தை



அருட்பணி. இரேஷ் பெர்னாண்டோ அடிகளாரின் தலைமையிலும் கொடியேற்றத்தோடு ஆரம்பமாகியது. நவநாள் திருப்பலியை வட்டார மக்கள் மற்றும் துணை ஆலய இறைமக்கள் இணைந்து சிறப்பித்தனர். சனிக்கிழமை மாலை 5.00 மணிக்கு அருட்பணி. Dr.B. போல் றொபின்சன் அடிகளாரினால் நற்கருணை எழுந்தேற்றம் செய்யப்பட்டு, ஆலய வளாகத்தை சுற்றி நற்கருணை பவனியாக கொண்டு செல்லப்பட்டது. 30.06.2024 ஆம் திகதி காலை 8.00 மணிக்கு அருட்பணி. லக்ஷ்மன் பீறிஸ், அருட்பணி ஜோய் மரியரத்னம் CMF அடிகளாரின் தலைமையிலும் திருவிழா கூட்டுத்திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது. திருப்பலியின் பின் இளைஞர் ஒன்றியத்தினரால் வினோத விளையாட்டுக்கள் நடாத்தப்பட்டது. அன்றைய தினம் மாலை 5.30 மணிக்கு புனித அந்தோனியாரின்



திருச்சுரூபம் அனைத்து பங்கு மக்களின் பாதையினூடாக பவனியாக கொண்டு செல்லப்பட்டது. ஏனைய மதத்தவர்களால் வீதியோரங்களில் அன்னதானம் வழங்கப்பட்டது. பின் அந்தோனியாரின் திருச்சுரூபம் ஆலயத்திற்கு கொண்டுவரப்பட்டு புனிதரின் சுரூப ஆசிருடன் திருவிழா இனிதே நிறைவுபெற்றது. 07.07.2024 ஆம் திகதி பங்குத்தந்தை மற்றும் பங்கு மக்களால் கொடி இறக்கப்பட்டது.

# இறையனுபவம் எப்படிப்பட்டது?

**இன்னுமா தயக்கம் 32**




அன்பு நிறைந்த சகோதரமே,

ஊருக்கு அருகில் ஒரு உயரமான குன்று இருந்தது. அந்தக் குன்றின் உச்சியில் என்ன இருக்கின்றது. என்று பார்க்க பலர் முயற்சி செய்து யாரும் வெற்றி கொள்ளவில்லை. ஒரு முறை ஒரு ஞானி அந்த ஊருக்கு வந்து அந்த மலையுச்சியில் என்ன இருக்கின்றது என்று மக்களுக்கு விளக்கம் தந்தார். இந்த விளக்கத்தைக் கேட்ட சிலர், ஞானியின் சொல்லைக் கேட்டு அந்த மலையைப் பற்றி அறிந்து கொண்டதாக நிறைவு கொண்டனர். சிலர் நமக்கெதற்கு அந்த மலையென்று அதைப் பற்றி கவலை கொள்ளாமல் இருந்தனர். இன்னும் சிலர் மலையுச்சியை அடைய அந்த மலை மீது சிரமம் பார்க்காமல் ஏற விழைந்தனர். ஏறியவர்களை மலையடியில் நின்று பலர் ஆரவாரம் செய்து உற்சாகப் படுத்தினர். அவர்களிடம் மக்கள் பல கேள்விகளை கீழே இருந்து கேட்டுக் கொண்டே இருந்தனர். மலையில் ஏறிக் கொண்டிருந்த அனைவரும் பல கதைகளை அவர்களுக்குக் கூறினர். ஆனால், மலையுச்சியை அவர்கள் அடையவில்லை. மலையுச்சியின் காட்சியைக் காணாமலேயே அந்தக் காட்சியைப் பற்றி பல கதைகளைக் கூறிக்கொண்டிருந்தனர். அவர்கள் மலையுச்சியை ஏற முடியாமலேயே கீழே இறங்கினர்.

ஒரு இளைஞன் மட்டும் அந்த மலையுச்சிக்கு மற்றவர்களுக்கு முன்பாக ஏறிவிட்டான். அந்த மலையுச்சியை அடைந்த அவன் கண்ட காட்சியில் மெய்மறந்து நின்றான். கீழே இருந்து அவன் ஏறியதைக் கண்ட மக்கள் அங்கே என்ன இருக்கின்றன என்று கேட்டுக் கொண்டே இருந்தனர். ஆனால் அந்த இளைஞன் பேச்சின்றி மெய்மறந்தவனாய் கண்ட காட்சியிலேயே நிலைத்து நின்றான். கீழே இருந்து அவன் தங்களுக்கு தான் கண்ட காட்சியைப்பற்றி கூறுவான் என்று நினைத்திருந்த மக்கள் கொஞ்சம் கொஞ்சமாக விலகிச் சென்றனர். ஆனால் அந்த இளைஞன் மட்டும் மலையுச்சியிலிருந்து இறங்கவே இல்லை. அவனுக்கு அந்தக் காட்சி மிகவும் பிடித்திருந்தது. அந்தக் காட்சியிலிருந்து அவன் தன்னை விடுவித்துக் கொள்ள விரும்பவே இல்லை.

“விண்டவர் கண்டதில்லை, கண்டவர் விண்டதில்லை!” என்ற கூற்றுக்கு இதுவே சிறந்த எடுத்துக் காட்டு. “விண்டவர்” அதாவது பேசுபவர் கண்டதில்லை. கண்டவர் பேசுவதில்லை என்பதே இதன் கருத்து.

இது ஒரு கற்பனை நிகழ்வாக இருந்தாலும் இந்த கதை கூறும் நீதி மிக முக்கியமானதாகும். நம் மத்தியில் பல்வேறு வகையான மக்கள் இருக்கின்றார்கள். அவர்களுள்,

1. இறையனுபவம் பெற்ற ஞானிகள்
2. அந்த ஞானிகளின் பேச்சைக் கேட்டு இறைவனைப் பற்றிய சில கருத்துக்களை மட்டும் பெற்றுக் கொண்டு அது போதும் என்று தங்கள் ஆன்மீகத் தேடலை நிறுத்திக் கொள்பவர்கள்.
3. ஆன்மீகத் தேடல் என்பது தேவையற்ற ஒன்று என்று அதைப் பற்றி அசட்டை செய்பவர்கள்
4. ஆன்மீகத் தேடலை தாங்கள் மேற்கொள்கின்றோம் என்று பிறருக்குப் பறைசாற்றி அதைப் பற்றி பல கதைகளை மட்டும் பேசிக் கொண்டிருப்பவர்கள்.
5. இறையனுபவத்தை கண்கூடாகக் கண்டு அதிலேயே நிலைத்திருப்பவர்கள்

இதில் இறையனுபவம் பெற்ற ஞானிகள் நம்மை வழிநடத்துவதற்காக வருகின்ற குருக்கள் அவர்களைப்பற்றி நாம்கவலை கொள்வதில்லை. இரண்டாம் வகை மனிதர்களாக ஞானிகளின் பேச்சைக் கேட்டு அந்தக் கருத்துக்களை தாங்களே அனுபவப் பூர்வமாகப் பெற்றுக் கொண்டதைப் போன்று எண்ணிக் கொண்டு அதில் முழு மனநிறைவைப் பெறுபவர்கள். இவர்கள் தங்கள் அனுபவத்தை பெற விரும்பாத மக்கள் இறைவனை அனுபவித்துப் பெறுவதற்குப் பதிலாக பிறர் வாயிலாக பெற்றுக் கொண்டதாக தங்களைத் தாங்களே ஏமாற்றிக் கொள்பவர்கள். மூன்றாம் வகை மனிதர்கள் தங்களுக்கும் இறைவனுக்கும் தொடர்பே இல்லை அது தங்களுக்குத் தேவையற்ற செயல் என்று எண்ணி ஒதுங்கிக் கொள்பவர்கள். நான்காம் வகை மனிதர்கள் பிறர் பார்க்க வேண்டும் என்பதற்காக தங்கள் ஆன்மீக செயல்பாடுகளைச் செய்பவர்கள். இவர்கள் ஆன்மீகத்தைப் பற்றி வெறுமனே பேசிக் கொண்டே இருப்பார்களே தவிர, இறைவனை துளியளவும் அனுபவிக்காதவர்கள். இவர்களிடம் நாம் மிகவும் கவனமாக இருக்க வேண்டும். காரணம் இவர்களே மக்களை தவறான வழிக்குத் திருப்பி விடுபவர்கள்.

ஐந்தாம் வகை மனிதர்களே இறைவனை உண்மையாக அனுபவிப்பவர்கள். இவர்கள் பிறருக்காக அல்ல, தங்கள் இறையனுபவத்திற்காகவே உழைப்பவர்கள். முதலாம் வகை மனிதர்களும் ஐந்தாம் வகை மனிதர்களும் ஏறத்தாழ ஒரே வகையானவர்கள். இவர்களால் மட்டுமே சரியான வழியை மக்களுக்குக் காட்ட முடியும்.

இத்தகைய மனிதர்களில் நாம் எந்த வகை மனிதர்களாக இருக்கின்றோம் என்று சற்று சிந்திப்போம். பல வேளைகளில் நாம் இரண்டாம், மூன்றாம் வகை மனிதர்களாகவே நின்றுவிடுகின்றோம். இறைவனை நம் அனுபவத்தில் சந்திக்க முயற்சி எடுக்கும் ஐந்தாம் வகை மனிதர்களாக மாற விழைவோம்.

இறையாசீருடன்
அருட்பணி. அலெக்ஸ் மரிய செல்லையா

## சுதேச குருக்கள் மற்றும் துறவியர் தினக் கொண்டாட்டம்

பாலையூற்று லூர்து அன்னை திருத்தலம் மற்றும் உவர் மலை குழந்தை இயேசு ஆலயத்தில் சுதேச குருக்கள் மற்றும் துறவியர் தினம் 28.07.2024 அன்று ஞாயிற்றுக் கிழமை சிறப்பிக்கப்பட்டது.





## ஆலயத் திருவிழாக்கள் சில

### அன்புவழிபுரம் புனித சதாசகாய அன்னை ஆலயம்



### கும்புறுபிட்டி புனித சவேரியார் ஆலயம்



# இளம் சமுதாயத்தினரிடையே சமூகமயமாக்கலின் முக்கியத்துவம்

இன்றைய சிறுவர்களே நாளைய சமுதாயத்தினர் என்பதற்கமைவாக பிள்ளைகளின் வாழ்வில் சமூகமயமாக்கலின் வகிபங்கு அவசியமானதொன்றாகும். அந்தவகையில் சமூகமயமாக்கல் என்பது சமூகத்தில் அங்கம் வகிக்கும் ஏனைய உறுப்பினர்களுடன் எவ்வாறு தொடர்புகொள்வது தொடர்பாகக் கற்றுக்கொள்வதாகும். அதாவது மற்றவர்களுடனான நமது தொடர்புகளை நிர்வகிக்கும் சமூக விதிமுறைகள், மதிப்புகள் மற்றும் நம்பிக்கைகள் பற்றிய அறிவைப் பெற்றுக்கொள்ளல் என்பவை இவற்றுள் உள்ளடங்குகின்றது. பிறப்பு முதல் இறப்பு வரை சமூகத்துடன் இணைந்து வாழும் மனிதன் தொடர்ச்சியாக சமூகமயமாக்கல் செயன்முறைகளில் ஈடுபட்ட வண்ணமே உள்ளான். சமூகமயமாக்கலானது குறித்த ஒரு வயதின் ஆரம்பத்தில் மாத்திரமன்றி இறக்கும் வரையில் கூடியும் குறைந்தும் நிகழும் ஓர் ஆயுள்காலத் தொழிற்பாடாகும்.

அந்தவகையில் சமூகமயமாக்கல் மனித வாழ்வில் இடம்பெறும் சந்தர்ப்பங்களாக குழந்தைப்பருவம் - குடும்பம், பிள்ளைப் பருவம் - பாடசாலை, அயலவர், கட்டிளமைப்பருவம் - சமவயதுக்குழுக்கள், வளர்ந்தோர் - ஊடகம், நண்பர்கள் மற்றும் முதியோர் - ஊடகம் என்று ஒவ்வொரு பருவத்திலும் வெவ்வேறு சமூகமயமாக்கல் முகவர்களுடன் தொடர்புறுவதைக் குறிப்பிட முடியும். இவற்றுள் குழந்தைப் பருவம் மற்றும் பிள்ளைப் பருவத்தை பொறுத்தமட்டில் எமது சுய உணர்வை உருவாக்கி புதிய உலகிற்குள் தடம்பதிக்க கற்றுக்கொள்ளும் போது இந்த சமூகமயமாக்கல் மிகவும் அவசியமானதொன்றாகின்றது.

பிள்ளைகளுக்கு சமூகமயமாக்கல் ஏன் அவசியம்? என வினவும்போது பின்வரும் அம்சங்கள் அவற்றை வலுப்படுத்தி நிற்கின்றன. சமூகமயமாக்கல் ஆரோக்கியமான வளர்ச்சி மற்றும் உறவுகளுக்குத் தேவையான தகவல் தொடர்பு திறன்களைப் பெறுவதற்கு பிள்ளைகளுக்கு உதவுகிறது. மேலும் மற்றவர்களுடன் தொடர்பு கொள்வதன் மூலம் பிள்ளைகள் தங்களைத் தாமே கவனித்துக் கொள்ளவும், புரிந்து கொள்ளவும், திறம்பட தன் திறனை வெளிப்படுத்தவும் கற்றுக்கொள்கிறார்கள். இதன்போது தகவல் தொடர்பு திறன்கள் வாய்மொழி மற்றும் சொற்கள் அல்லாத தொடர்பு உட்பட பல்வேறு வடிவங்களில் வருகின்றன. மேலும் பல்வேறு வகையான தொடர்புத் திறன்களை வளர்ப்பதால் அவை பிள்ளைகளுக்கு பல்வேறு வாழ்க்கை நிலைகளில் முன்னேறும் போது பயனளிப்பதாக அமையும்.

சமூகமயமாக்கல் பிள்ளைகளை தன்னம்பிக்கையுடையவராகவும், சுதந்திரமான தனிமனிதனாகவும் இருக்க உதவும் அதேசமயம் திறன்களை வளர்க்கவும் அனுமதிக்கிறது. அதாவது தமது குடும்பத்திற்கு வெளியே உள்ளவர்களுடன் தொடர்பு கொள்வதன் மூலம் நிச்சயமற்ற நிலையிலும் கூடக் குழந்தைகள் சுயமரியாதை மற்றும் தன்னம்பிக்கையை வளர்த்துக் கொள்வர் எனலாம்.

**உதாரணமாக:-** முன்பள்ளியின் முதல் நாள் குழந்தையைப் பொறுத்தமட்டில் ஒரு பெரிய மற்றும் பயமுறுத்தும் சூழலாக இருக்கலாம். ஆனால் காலப்போக்கில் அச்சூழலே மீள்தன்மை மற்றும் தன்னம்பிக்கை கொண்ட குழந்தைகள், புதிய செயல்களில் ஈடுபடுவது அல்லது அந்நியரை அணுகுவது போன்ற ஆரோக்கியமான செயற்பாடுகளில் ஈடுபடுவதற்குமான வாய்ப்புகளையும் அதிகம் தோற்றுவிக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

பிள்ளைகள் மற்றும் இளைஞர்களுக்கு சமூகமயமாக்கல் பகிர்ந்துகொள்ளும் பண்பினைக் கற்றுக்கொடுக்கிறது. மற்றும் அவர்களைக் குறைவான தன்னலமற்றவர்களாக மாற்றுவதற்கும் வழிவகுக்கின்றது. சிறு குழந்தைகளில், குறிப்பாக முதல் அல்லது ஒரே வயது குழந்தைகள் சுயநலமாக இருப்பது ஒரு பொதுவான போக்காகும். ஏனெனில் அவர்களின் மனம் அவர்கள் பார்க்க முடியாததை அல்லது கற்பனை செய்ய முடியாததை விட அவர்கள் பார்க்கக்கூடியதைச் சுற்றியே சுழல்கிறது. இதனடிப்படையில் சமூகமயமாக்கல் குழந்தைகளை மற்றவர்களுடன் தொடர்பு கொள்ளவும், வளங்கள் மற்றும் அறிவைப் பகிர்ந்து கொள்ளவும் ஊக்குவிக்கிறது. மேலும் இது பெரியவர்களின் ஆக்கப்பூர்வமாகவும் தர்க்கரீதியாகவும் சிந்திக்கும் திறனில் பங்கு வகிக்கின்றது. கூடுதலாக மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்ளவும், தொடர்பு கொள்ளவும் பிள்ளைகள் மற்றும் மக்கள் மத்தியில் நண்பர்களை உருவாக்கவும் உதவுகிறது. இது குழந்தையின் உணர்ச்சி மற்றும் மன ஆரோக்கியத்திற்கு அவசியமானதொன்றாகும்.

சமூகமயமாக்கலில் பச்சாதாபம் ஒரு முக்கியமான பண்பாகும். ஏனெனில் இது பிள்ளைகளை மற்றவர்களிடம் அன்பாகவும் அக்கறையுடனும் இருக்க உதவுகிறது. முன்பு கூறியது போல், சமூக தொடர்பு என்பது பேசுவது மட்டுமல்ல, கேட்பது, கவனிப்பது மற்றும் பதிலளிப்பது ஆகியவற்றை உள்ளடக்கியது. அந்தவகையில் பாதிக்கப்பட்ட ஒருவருக்கு உதவுவதைக் கவனிப்பது அல்லது தவறாக நடத்தப்படும் ஒருவருக்கு ஆதரவாக நிற்பது என்பது பச்சாதாபத்தின் இன்றியமையாத பாடமாகும். இது சமூகத் தொடர்பு மூலம் மட்டுமே கற்பிக்கப்படும். எதிர்காலத்தில் பச்சாதாபமுள்ள பிள்ளைகள் மிகவும் சகிப்புத்தன்மையுடையவராகவும் ஏற்றுக் கொள்ளக்கூடியவர்களாகவும், மீள்தன்மையுடனும் இருப்பார்கள். ஏனெனில் அவர்கள் மோதலை எதிர்கொள்வதற்கும் தொடர்புகொள்வதற்கும், புதிய சூழலில் நேர்மறையாக ஒருங்கிணைப்பதற்கும் தேவையான திறன்களை வளர்த்துக் கொள்பவர்களாக காணப்படுவார்கள்.

“தோள் கொடுப்பான் தோழன்” என்ற வகையில் பிள்ளைகளுக்கு நண்பர்களை உருவாக்கிக் கொள்ள சமூகமயமாக்கல் மிக மிக அவசியம். அதாவது ஒருவரின் சொற்களஞ்சியத்தை விரிவுபடுத்துதல், பலதரப்பட்ட சிந்தனை முறைகளை வளர்த்தல் மற்றும் நீடித்த நினைவுகளை உருவாக்குதல் உள்ளிட்ட பல்வேறு காரணங்களுக்காக நண்பர்கள் அவசியமாகின்றனர். மேலும் நண்பர் குழாமினர் இவர்களுக்கு கற்றுக்கொண்டதை விவாதிக்கவும் வலுப்படுத்தவும் இவர்களுக்கு வாய்ப்பினை ஏற்படுத்தி தருகின்றனர்.

இதன் மூலம் பிள்ளைகள் தங்கள் வாழ்க்கையில் முக்கியமான காலகட்டங்களில் உதவி மற்றும் ஆதரவை பெற்றுக்கொள்ளவும் முடிகின்றது. இவ்வாறு வாழ்க்கையில் அனைத்து நிலைகளிலும் நண்பர்கள் எமது சமூக வலைப்பின்னலின் அடித்தளமாக உள்ளனர். மேலும் இவ்வகை சமூகமயமாக்கல் தொடர் மன அழுத்தங்களைக் குறைக்கவும் மன மற்றும் உடல் ஆரோக்கியத்தை மேம்படுத்தவும் உதவுகின்றன.

இவ்வாறு பல்வேறு வகையில் மாணவர் சமூகமயமாக்கலுக்குட்படுவது வாழ்க்கையின் இன்றியமையாத அம்சமாகும். இது வேடிக்கை மற்றும் நண்பர்களை உருவாக்குவதற்கான ஒரு வழி மட்டுமல்ல, தனிப்பட்ட மற்றும் கல்வி வளர்ச்சியின் ஒரு முக்கிய அம்சமாகவும் உள்ளது. சமூகமயமாக்கல் என்பது மாணவர்கள் தங்கள் சமூக திறன்களை வளர்த்துக்கொள்ளவும், மேம்படுத்தவும் ஒரு சிறந்த வாய்ப்பாகும். சமூக தொடர்பு மூலம் மாணவர்கள் எவ்வாறு திறம்பட தொடர்புகொள்வது, மற்றவர்களுடன் பச்சாதாபம் கொள்வது மற்றும் மோதல் பேச்சுவார்த்தை நடத்துவது ஆகியவற்றைக் கற்றுக் கொள்ளலாம். இந்த திறன்கள் தனிப்பட்ட மற்றும் தொழில் ரீதியாக வலுவான உறவுகளை உருவாக்குவதற்கு அவசியமானதோடு இவை மாணவர்களின் எதிர்கால வாழ்க்கையின் வெற்றிக்கும் மிக முக்கியமானவையாகும்.



சமூகமயமாக்கல் பல்வேறு பின்னணிகள் மற்றும் கலாச்சாரங்களைச் சேர்ந்த மக்களுடன் பழகுவதற்கு மாணவர்களுக்கு சந்தர்ப்பங்களினை ஏற்படுத்தி தருகின்றது. இவ்வழிவகைகள் வெவ்வேறு கண்ணோட்டங்கள், நம்பிக்கைகள் மற்றும் கலாசாரங்களைப் பற்றிய சிறந்த புரிதலை வளர்க்க மாணவர்களுக்கு உதவும். மேலும் அவர்கள் பல்வேறு பின்னணிகள் மற்றும் கலாசாரங்களைச் சேர்ந்த மக்களுடன் பழகக் கற்றுக்கொள்கிறார்கள். இது மக்களிடையே இருக்கும் வேறுபாடுகளைப் புரிந்துகொள்ளவும் பாராட்டவும் உதவுகிறது. இது மாணவர்களின் சமூக நம்பிக்கையை வளர்த்துக் கொள்வதற்கான வாய்ப்புகளை வழங்குகிறது. இவ்வாறு மற்றவர்களுடன் பழகுவதும், சமூக நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கு மூளையைத் தூண்டி மனச் சுறுசுறுப்பை மேம்படுத்துகிறது. சமூகமயமாக்கல் விமர்சன சிந்தனை திறன், படைப்பாற்றல் மற்றும் சிக்கல் தீர்க்கும் திறன்களை வளர்க்க உதவுகிறது. இது மாணவர்களை வெறுமனே கூட்டத்தைப் பின்தொடர்வதை விட சுயாதீனமாகச் சிந்திக்கவும், தங்கள் சொந்த தீர்மானத்தின் அடிப்படையில் முடிவுகளை எடுக்கவும் ஊக்குவிக்கிறது.

மற்றும் சமூகமயமாக்கல் மாணவர்களுக்கு குழு திட்டங்களில் ஒன்றாக வேலை செய்யவும், குழு விளையாட்டுக்களில் பங்கேற்கவும் மற்றும் பிற கூட்டு நடவடிக்கைகளில் ஈடுபடவும் வாய்ப்புகளை வழங்குகிறது. குழுக்களில் பணிபுரிவது மாணவர்களின் பன்முகத்தன்மையின் மதிப்பைப் பாராட்டவும் வெவ்வேறு நபர்களின் பலம் மற்றும் பலவீனங்களைப் புரிந்து கொள்ளவும் உதவுகிறது. நாம் பழகும் விதம் நமது உறவுகள், நடத்தை மற்றும் ஒட்டுமொத்த நல்வாழ்வில் குறிப்பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத்துகிறது.

எனவே சமூகமயமாக்கல் இளம் பிள்ளைகளின் வளர்ச்சிக்கு இன்றியமையாதது. ஏனெனில் இது தகவல் தொடர்புதிறன், தன்னம்பிக்கை மற்றும் சுதந்திரம் பகிர்ந்து கொள்ளும் திறன், பச்சாதாபம் மற்றும் நட்பு ஆகியவற்றை வலுப்படுத்த உதவுகிறது. மேலும் சமூகமயமாக்கல் குழந்தைகளின் மன, உடல் மற்றும் உணர்ச்சி நல்வாழ்வில் அவர்களின் வாழ்நாள் முழுவதும் நேர்மறையான தாக்கத்தை ஏற்படுத்துகிறது. ஆதலால் சமூகமயமாக்கலினை பிள்ளைகளிடையே பெற்றோரும் பராமரிப்பாளர்களும் சிறு வயதிலிருந்தே ஊக்குவிப்பது இன்றியமையாததாகும்.

**தகவல்: இணையம்**

# அன்பிய வாழ்வே கிறிஸ்தவ நிறைவாழ்வு

செ. செல்வராஜ்
(பெரிய உப்போடை)

நமது ஆண்டவராகிய இயேசுக்கிறிஸ்து ஒருமதத்தை உருவாக்க உலகிற்குவரவில்லை. மாறாக பாவத்திலிருந்து மனுக்குலத்தை மீட்டெடுத்து பாவமன்னிப்பின் நிட்சயத்தை மனுக்குலம் முழுவதற்கும் அளிப்பதன் மூலமாக இவ் உலகத்தை இறையனுபவத்தில் ஊன்றிய, நீதி நிறைந்த, சமதர்ம சகோதரத்துவ சமுதாயமாக மாற்றி அமைப்பதன் வாயிலாக, இவ்வுலகில் இறையாட்சியை ஏற்படுத்தி, மனுக்குலத்தின் மீட்புத்திட்டத்தை நிறைவேற்றவே வந்தார். (லூக் 4:43,1 திமொத்தேயு 1:15)



கடவுளுடைய மாறாத அன்பினால் இயேசுக்கிறிஸ்து வழியாக இலவசமாக எமக்கு மீட்பு கிடைத்துள்ளது. எனினும், எதிர்நோக்கும் அளவில் தான் அது கிடைத்துள்ளது. (உரோ 8:24) அதாவது நாம் பாவத்திலிருந்து விடுதலை பெறாமல் பாவவாழ்க்கையிலேயே நிலைத்திருப்போமேயானால் மீட்பின் நிட்சயத்தை இழந்து விடுவோம். (எபி 2:3)ல் கூறுவதுபோல அவ்வாறிருக்க இத்தகைய ஒப்பற்ற மீட்பைப்பற்றி நாம் அக்கறையற்றிருப்போமானால் தண்டனையிலிருந்து எப்படித் தப்பமுடியும் என்று கூறப்பட்டுள்ளது. நாம் பாவ வாழ்க்கையிலேயே நிலைத்திருப்போமானால் பாவமன்னிப்பாகிய மீட்பை இழந்துவிடுவோம். எனவே நாம் பாவத்திற்காக மரித்தவர்களாக, பாவத்திலிருந்து விடுவிக்கப்பட்டு விடுதலை வாழ்வை பெற்றவர்களாக இறைவனுடைய வார்த்தைகளை வாசித்து தியானித்து, வாசித்துத் தியானித்த வார்த்தைகளை வாழ்வாக்குவதன் மூலம் எமது மீட்பினை நிச்சயப்படுத்திக் கொள்வோம்.

நமது வழிபாடுகளும் நமது வாழ்க்கையும் ஒன்றாக இணைந்து பயணிப்பதன் வாயிலாக இறைவன் மாட்சிப்படுத்தப்படுத்தப்படுகின்றார். (மத் 5:16) மாறாக, வழிபாடு ஒன்றும் வாழ்க்கை வேறொன்றுமாக இருக்குமேயானால் எமது வழிபாடுகள் அர்த்தமற்றதாகவும், கடவுள் முன் அருவருப்பிற்கு உரியதாகவுமே இருக்கும், (எசாயா 1:13-17) இவர்கள் என்னை வழிபடுவது வீண் என்கிறார் ஆண்டவர். (மத் 15:8-9) நமது வழிபாடுகளும் நமது வாழ்வும் ஒன்றாக இணைந்து பயணிப்பதன் மூலமாக நாம் நிலைவாழ்வை உரிமையாக்கிக்கொள்ள வேண்டும் என்பதற்காகத் தான் மூன்றாம் நூற்றாண்டின் இறுதியில் தொலைந்துபோன விண்ணகத்தந்தைக்கு திருவுளமான (மத் 7:21) அன்பை அடித்தளமாகவும், உயிர்த்த கிறிஸ்துவை மையமாகவும் கொண்டு தூய ஆவியானவரின் ஆளுமைக்குள் இணைந்து வாழும் இறைசமூகமாக தொடக்ககால கிறிஸ்தவர்கள் நமக்கு முன்மாதிரியாக வாழ்ந்து காட்டிய வாழ்க்கை நெறியைத் தான் இந்த இருபதாம் நூற்றாண்டில் இரண்டாம் வத்திக்கான் சங்கத்தினூடாக தூய ஆவியார் வழியாக மீண்டும் அன்பியமாக நமக்கு அருளப்பட்டது.

எனவே நாம் நமது அன்பைப் பிறரோடு பகிர்ந்து உறவில் சங்கமிப்பதன் வாயிலாகத் தான் அன்பியங்களை வளர்ச்சிப் பாதையில் இட்டுச் செல்ல முடியும். நாமே திருஅவை என்ற உண்மையை உணர்த்தும் அமைப்பாகவும், உயிர்த்த கிறிஸ்துவின் மாறாத அன்பைச் சுவைத்து அனுபவித்து அயலவர்களோடு பகிர்ந்து அறிவிக்கும் இடமாகவும், இறைமக்களை நம்பிக்கை வாழ்க்கையில் உருவாக்கும் கருவியாகவும், நற்செய்தியை வாழ்வாக்கும் தளமாகவும், அன்புக்கலாச்சாரத்தின் ஆரம்பமாகவும், உயிர்த்து கிறிஸ்துவுக்கு சாட்சிகளை உருவாக்கவும்,சாட்சிகளாக மாற்றவும் அன்பியங்கள் சிறந்த தளமாகும்.

திருமுழுக்கின் வழியாகக் கடவுளின் பிள்ளைகளாக நாம் மறுபடியும் பிறக்கின்றோம். விண்ணகத் தந்தையின் பிள்ளைகள் நாம் என்ற உரிமை வாழ்வைப் பெற்றுக்கொண்ட போதிலும், அந்த உரிமை வாழ்வை அனுபவித்து வாழ்பவர்களோ மிகமிக சொற்பப்பேராகும். கிறிஸ்து இயேசுவோடு நாம் இணைந்து வாழாததன் காரணமாக இந்த உண்மையை உணர்வு பூர்வமாகவும், அறிவுபூர்வமாகவும், புரிந்துகொள்ளவும், ஏற்றுக்கொள்ளவும், உணர்ந்து கொள்ளவும் தவறிவிடுகின்றோம். (உரோ 8:14-17, கலா 4:6-7)

அன்பியங்களில் நாம் இணைந்து வாழ்வதன் மூலமாக கிறிஸ்து இயேசுவோடு இணைத்துக் கொள்ளப்பட்டவர்களாக தூய ஆவியானவரை எமக்குள் பெற்றுக்கொண்டு (உரோ 8:10) கடவுளுக்கு உகந்த உண்மையும் உத்தமமான வாழ்க்கையை வாழ்ந்து கடவுளை மாட்சிப்படுத்துகின்றவர்களாகவும், (மத் 5:16) விண்ணகத்தந்தையின் திருவுளத்தை நிறைவேற்று பவர்களாகவும், (மத் 7:21) இயேசுக்கிறிஸ்துவின் இலட்சியமான இறையாட்சியைக் கட்டியெழுப்புவதன் மூலமாக மீட்பின் நிச்சயத்தைப் பெற்றுக்கொண்டவர்களாக விண்ணக வாழ்வை (மோட்ச பேரின்ப பாக்கியத்தை) சுதந்தரித்துக் கொள்ளும் பாக்கியத்தையும் நாம் பெற்றுக்கொள்கின்றோம்.

திருஅவையின் பார்வையில் அன்பியங்கள் பற்றி நோக்குவோமேயாகில், திருஅவை இறையாட்சியின் திண்ணமான கருவியாக செயற்படுமா? இக்கேள்விக்கு விடையளிக்கும் விதமாக திருஅவையின் நம்பிக்கையின் நட்சத்திரமாக தோன்றியிருப்பவைதான் அன்பியங்கள் எனப்படும் அடித்தள திருஅவைச் சமூகங்கள், அடித்தள கிறிஸ்தவ சமூகங்கள், சிறிய கிறிஸ்தவ சமூகங்கள் (குழுக்கள்) ஆகும். இதனால்தான் அன்பியங்கள் வாழும் திருஅவையின் புதிய முகம் அல்லது, புதிய முறையில் வாழும் திருஅவை என அழைக்கப்படுகின்றது.

தொடக்ககால திருஅவையின் பாரம்பரியத்தின்படி தந்தை, மகன், தூய ஆவியின் ஒன்றிப்புக்குள் கொண்டுவரப்பட்ட இறைமக்கள் (திருஅவை எண் 4) என்று இரண்டாம் வத்திக்கான் சங்கம் கூறுகின்றது. திருமுழுக்கு என்னும் அருளடையாளம் வழியாக கிறிஸ்தவர்கள் ஒவ்வொருவரும், தாம் பெற்றுள்ள அழைப்பை, ஒரு சமூகமாக வாழ்வதே திருஅவை என்ற புதிய கண்ணோட்டத்தை இரண்டாம் வத்திக்கான் சங்கம் ஏற்படுத்தியது. அடித்தளத் திருஅவைச் சமூகங்கள் (அன்பியங்கள்) கிறிஸ்தவ வாழ்வுக்கான பயிற்சியும் மறைபரப்புப் பணிக்கு ஏற்ற மையமாகவும், திருஅவையின் உயிராற்றல் மிக்க சக்தியாகவும், பயிற்சி மற்றும் நற்செய்தி அறிவிப்புப் பணியின் கருவியாகவும், அன்பு என்னும் நாகரீகத்தின் அடிப்படையில் உருவாக்கப்படும் புதிய சமூகத்தின் தொடக்கமாகவும் உள்ளது.

இச்சமூகங்கள் பங்கு என்ற தலத்திருஅவையின் பணிகளைப் பகிர்ந்தும் சமூகங்களை இணைத்தும் பங்குகளுடன் செயற்பகின்றன. இச்சமூகங்கள் பின்தங்கிய மற்றும் கிராமப்புற சூழ்நிலைகளில் வேரூன்றிவளர்வதால் கிறிஸ்தவ வாழ்வின் புளிப்புமாவு போன்றும், ஏழை மற்றும் புறக்கணிக்கப்பட்ட மக்களின் ஆதாரமாகவும் உள்ளது.

என்று 1990 இல் திருத்தந்தை இரண்டாம் அருள் சின்னப்பரின் மீட்பரின் பணி சுற்றுமடல் மற்றும் திருத்தந்தை ஆறாம் சின்னப்பரின் நற்செய்திப்பணி சுற்றுமடலின் தொடர்ச்சியாக நற்செய்தி அமைந்துள்ளது. இந்தப் பின்னணியில் தான் இச்சுற்றுமடல் எண் 51ஐ அடித்தள திருஅவைச் சமூகங்களுக்காக திருத்தந்தை அர்ப்பணித்துள்ளார்.

இரண்டாம் வத்திக்கான் சங்கத்தின் பொது நிலையினரின் தூதுப்பணி என்னும் சுற்றறிக்கை எண் 17இல் பொது நிலையினர் சிறு சிறு குழுக்களாகக் கூடி உரையாடுவதாலும், பிறரன்புச் செயல்கள் வழியாகவும், நட்புறவுடன் வாழ்வதினால் மட்டுமே பிறருக்கு ஏற்ற சாட்சிகளாக விளங்க முடியும் என்று கூறப்பட்டுள்ளது. அன்பிய ஒன்றுகூடல்கள் அதில் இடம்பெறும் இறைவார்த்தைப் பகிர்வுகள் இவற்றுக்கான வழிப்பாதைகளாக, வழிகாட்டல்களாக உதவுகின்றன. மேலும் அன்பியங்கள் வழியாகவே பிறர் திருஅவையை அடையாளம் காணமுடியும் என்று கூறப்பட்டுள்ளது.

பங்கின் ஒரு பகுதியில் அதாவது அக்கம் பக்கத்தில் ஒரே சூழலில் வாழும் சில குடும்பங்கள் ஒன்று சேர்ந்து ஏழை, பணக்காரர், படித்தவர், பாமரர் என்ற வித்தியாசங்கள் எதுவுமின்றி அனைவருமே ஒரே மனதோடு ஒன்றுகூடுவதும். பெரியோர் சிறியோர் என வித்தியாசம் எதுவுமின்றி இன, மத மொழி பேதமின்றி சகலரும் இறையாட்சி விருந்தில் ஏக மனதோடு கலந்து கொள்ள வேண்டும். இவ்வாறு திருஅவையின் ஒன்றிப்பை உள்ளடக்கிய ஓர் இறைசமூகமாக அன்பியங்கள் திகழ்கின்றன.



அன்பியங்களின் மையமாக இருக்கின்ற உயிர்த்த கிறிஸ்துவை இறைவார்த்தைப் பகிர்வின் வழியாக நம்மத்தியில் பிரசன்னமாக்குகின்றோம். இயேசுவின் சீடர்களாக நாம் மாறிட நற்செய்திப் பகிர்வு நமக்கு உதவுகின்றது. நற்செய்திப் பகிர்வின் வழியாய் நாம் ஒரு புதிய குடும்பமாகின்றோம்.

தொடரும்...

# திருமலைத் தீபத்தின் இம்மாதப் பக்கம்
# உவர்மலை குழந்தை இயேசு ஆலய இறை மக்களுக்கு

## உருவாகி உருவாக்குவோம்

இறையேசுவில் பிரியமான அன்பு உறவுகளே நாம் எப்படி செபிக்கிறோம் என்ற கேள்வியை நாம் ஒவ்வொருவரும் நமக்கு நாமே கேட்க வேண்டும். ஏன் என்று சிந்திக்கின்றீர்களா?
சற்று நின்று தியானியுங்கள். நாங்கள் சொல்லும் செபங்கள் எம் மனதில் இருந்து வருபவையா? இவ் வினாவினை ஏன் எழுப்புகிறேன் என நினைக்கின்றீர்களா? அதற்கு காரணம் உண்டு.

திருஅவையால் எமக்கு எனத்தரப்பட்டுள்ள பொதுச் செபங்கள் பல உண்டு அவற்றில் நாம் கட்டாயம் செபிக்க வேண்டியவையும் உள்ளது. அதைக்கூட நாங்கள் எப்படி செபிக்கிறோம்? கேள்விகளுக்கு பதில் அளிப்பவர்களாகவா? அல்லது மனனம் செய்ததை வேகமாகச் செல்லும் புகையிரதம் போல் சொல்லிவிட்டுச் செல்கின்றோமா? நாமாக செபிக்கின்றோமா? என்று நம்மை நாமே கேட்கவேண்டும்.

இதனாலேயே இன்று திருப்பலியில் சொல்லப்படும் நம்பிக்கையின் வேண்டுதல்கள் பார்த்து வாசிப்பது, அல்லது பாடமாக்கி பேச்சுப் போட்டியில் சொல்வது, இதைவிட தந்துவிட்டதை என்னசெய்வதென்று வாசிப்பது. பிறகு எப்படி நாம் கேட்பதை கடவுள் தரவில்லை என்று சொல்ல முடியும்?

திருப்பாடல் 49:3-4 சொல்கிறது "என் வாய் ஞானமிகு சொற்களை உரைக்கும், என் மனம் விவேகமானவற்றை ஆழ்ந்து சிந்திக்கும் நீதிமொழிக்குச் செவிசாய்ப்பதில் நான் கருத்தாய் உள்ளேன்"

நான் செபிக்கும் சொற்களுக்கு நான் சொந்தக்காரன் இல்லை பின்னர் ஆண்டவர் எப்படி என் செபத்திற்கு செவிசாய்க்க முடியும் சிந்தியுங்கள்!

எப்படி நான் செபிக்க வேண்டும்? எதற்காகச் செபிக்க வேண்டும்? கற்றுத்தாரும் ஆவியானவரே என்று பாடிவிட்டு யாரோ எழுதிய மன்றாட்டை வாசித்து விட்டு சென்றால் எப்படி தூய ஆவியார் எம்மில் செயற்படுவார்.

கடவுள் தன்னிடம் உரையாடும்போது பழமொழிகளையும், அடுக்கு வார்த்தைகளையும் கேட்கவில்லை. உன் உள்ளத்தின் ஆழத்தில் இருந்து ஓர் இரு வார்த்தைகளாவது உனக்கு சொந்தமாக்கிச் சொல் என்கிறார்.

எனவே இந்த இறைவேண்டலின் ஏழு மாதங்கள் கடந்த நிலையில் இருக்கும் நாம், இனியாவது சுயமாக செபிக்க கற்றுக்கொள்வோம். எம்மை நாமே முதலில் இறைவனோடு உறவாட, உரையாட உருவாக்கிட முயல்வோம்.

வாருங்கள் செபியுங்கள் இறைவேண்டலின் இல்லமாக உருவாகி வரும் சந்ததியை உருவாக்கிடுவோம்.

**மறையாசிரியர்: பிரஷாந்தி**

இயேசுக் கிறிஸ்துவானவர் எமது பாவத்தை போக்கவும் எம்மை பாவத்திலிருந்து மீட்கவும் வந்த செம்மறியாவார். அவ்வாறு இயேசுக் கிறிஸ்துவானவர் மனித இயல்பையும் கடவுளின் இயல்பையும் கொண்டிருந்தார். அவ்வாறு நம் இயேசு மனித இயல்பை வெளிப்படுத்திய சந்தர்ப்பங்களை கீழ்வருமாறு நோக்கலாம்.

இயேசு கோபப்பட்ட, வியந்த, பசியுற்ற, கடிந்த, பரிவு கொண்ட, கவலையுற்ற மற்றும் அழுத சந்தர்ப்பங்கள்

### 1. இயேசு கோபப்பட்ட சந்தர்ப்பங்கள்

- இயேசு அலகையினால் சோதிக்கப்படும் போது (அகன்று போ சாத்தானே மத் 4:10)
- பேதுருவானவர் கடல்மீது நடக்க விரும்பி நடந்த போது மூழ்கப்போனார். அப்போது இயேசு கூறிய வார்த்தை (மத் 14:31)
- பரிசேயர், சதுசேயர் புளிப்புமாவு பற்றிய விளக்கத்தின் போதும் (சீடர்கள் அப்பம் பகிர்ந்தளித்தும் தமக்கென அப்பங்களை எடுத்துக் கொள்ளாததாலும் மத்16:8)
- அத்திமரத்தை இயேசு சபித்தல் (மத் 21:19)
- பேய் பிடித்த சிறுவனை சீடர்கள் குணமாக்க இயலாத போது (மத் 17:17)
- சிறுபிள்ளைகளை சீடர்கள் தடுக்கும் போது (மாற் 10:14)
- தலைமைக்குருவின் சொல்லை மீறி பேசியதால் இயேசுவின் கன்னத்தில் அறைந்த காவலரைப் பார்த்து கோபம் கொண்டார். (யோவா 18:23)
- எருசலேம் ஆலயத்தில் புறா விற்போரையும், காசு மாற்றுவோரையும் பார்த்து இயேசு கூறியது. (மத் 21:12)
- உடல் ஊனமுற்ற பெண்ணை குணமாக்கிய போது இயேசு தொழுகைக்கூடத் தலைவரைப் பார்த்து கூறியது (லூக் 13:14)
- ஏரோதுவைப் பார்த்து இயேசு கூறியது. (லூக் 13:32-33)
- இயேசுவின் அறிவுரைகள் (லூக் 17:1-4)

### 2. இயேசு கடிந்து கொண்ட சந்தர்ப்பங்கள்

- மறைநூல் அறிஞர் பரிசேயர் கண்டிக்கப்படல் (ஐயோ கேடு மத் 23:13-36)
- எம்மாவு சீடர்கள் போகும் வழியில் இயேசுவைப்பற்றி கூற இயேசு கடிந்தார். (லூக் 24:25)
- காற்றையும் கடலையும் இயேசு அடக்கும் போது (மத் 8:26)
- பேதுரு இயேசுவை கைது செய்யவந்த "மால்கு" என்பவரின் காதை துண்டித்த சந்தர்ப்பம் (யோவா 18:11, மத் 26:51)
- திருந்த மறுத்த நகரங்களுக்கு சாபம் எனும் பகுதி (மத் 11:20)
- இயேசு தம் சாவை இரண்டாம் முறை முன்னறி விக்கும் போது
- பேதுரு கடிந்து கொள்ள இயேசு பேதுருவை கடிந்து கொண்டார். (லூக் 8:33)
- யாக்கோபுவும், யோவானும் "தீ வந்து இவர்களை அழிக்குமாறு செய்யவா?" எனக்கூற இயேசு கடிந்து கொண்டார்.

### 3. இயேசு பரிவு கொண்ட சந்தர்ப்பங்கள்

- இயேசு ஐயாயிரம் பேருக்கு உணவளிக்கும் போது (மத் 14:14)
- இயேசு நாலாயிரம் பேருக்கு உணவளிக்கும் போது (மத் 15:32)
- நயீன் ஊர்க்கைம்பெண் மீது இயேசு பரிவு கொண்டார். (லூக் 7:13)

### 4. இயேசு கவலையுற்ற சந்தர்ப்பங்கள்

- மானிடமகன் உயர்த்தப்பட வேண்டும் எனும் பகுதியில் இயேசு தம் சாவை நினைத்து உள்ளம் கலங்குகிறார். (யோவா 12:27)
- கெத்தமனித் தோட்டத்தில் மனம் வருந்துகிறார். (மத் 26:37-38)
- "யூதாசே காட்டிக் கொடுப்பவன்" என இயேசு கூறிய போது (யோவா 13:21)
- இலாசர் மரித்த போது (யோவா 11:33)

### 5. இயேசு நம்பிக்கையை / செயலைக் கண்டு வியந்த சந்தர்ப்பங்கள்

- நூற்றுவத்தலைவரின் நம்பிக்கை (மத் 8:10)
- முடக்குவாதமுற்றவரை கட்டிலோடு கீழே இறக்கும் போது (மத் 9:2)
- நத்தனியேலைப் பார்த்து கபடற்றவர் என கூறுதல்

### 6. இயேசு பசியுற்ற சந்தர்ப்பங்கள்

- இயேசு அலகையால் சோதிக்கப்படும் போது (மத் 4:2)
- அத்திமர உவமை/ அத்திமரத்தை சபித்தல் (மத் 21:18)
- இயேசு சிலுவையில் இருக்கும் போது தாகமாய் உள்ளது என கேட்டார் (யோவா 19:28)
- உயிர்த்தெழுந்த பின் இயேசு சீடர்களிடம் "உணவருந்த வாருங்கள்" என கூறிய போது (யோவா 21:12)

### 7. இயேசு அழுத சந்தர்ப்பம்

- இலாசர் உயிர் விட்டதனால் (யோவா 11:35)

### 8. இயேசு நம்பிக்கையைக் கண்டு பாராட்டிய சந்தர்ப்பங்கள்

- பேதுரு இயேசுவை "நீரே மெசியா" என்று உரைத்த போது (மத் 16:16-17)
- இரத்தப் போக்குடைய பெண் நலமடைதல் (லூக் 8:48)
- நூற்றுவத் தலைவரின் மகன் நலமடைதல் (லூக் 7:9)
- பாவியான ஒரு பெண் நறுமணத்தைலம் பூசுதல் (லூக் 7:50)
- மரியா இயேசுவின் காலடியில் அமர்ந்த போது இயேசு கூறியது (லூக் 10:41)
- பத்துத் தொழுநோயாளியில் ஒருவரின் நம்பிக்கையைக் கண்டு மெச்சினார். (லூக் 17:18)

**செல்வி –: ரூபகுமார் ஆன் இவானா**

## சுய பரிசோதனை

நீங்கள் நம்பிக்கையில் நிலைத்திருக்கிறீர்களா? என உங்களையே சோதித்துப் பாருங்கள் (2 கொரிந்தியர் 13:5) "என்னைக் குற்றம் சொல்லும் முன் உன்னை ஒருமுறை பார். உன்னை நன்றாகப் பார்" என்று சிலர் கூறுவார்கள். ரொபேட் முரே என்ற வேத போதகர் கூறுவதைக் கவனியுங்கள் உன்னை ஒருமுறை பார் அதே நேரத்தில் கிறிஸ்துவை பத்து முறை பார் அப்பொழுது நீ கிறிஸ்துவில் மகிழ்ச்சியாய் இருப்பாய் உன்னில் உள்ள குறைகள் நீங்க உதவியாய் இருக்கும் நீ தூய்மை அடைவாய் கிறிஸ்துவின் கால்களில் விழுந்து "ஆண்டவரே நான் பாவி நீர் என்னை விட்டுப் போய்விடும்" என்றார். (லூக்கா 5:8) பேதுருவானவர் கூறியது போல இயேசுவோடு நம்மை ஒப்பிட்டுப் பார்த்தால் இப்படித்தான் நாம் ஒவ்வொருவரும் சொல்ல வேண்டியிருக்கும்.

நீங்கள் உங்களை ஆராய்ந்து பாருங்கள் என்ற வார்த்தைக்கு ஏற்ப எனது வாழ்வின் பயணம் நேர்த்திசையில் பயணிக்கின்றதா விரும்பிய இலக்கை நோக்கி செல்கின்றதா? எங்கே பிரச்சனைகள் இருக்கின்றன என்பவற்றை ஆய்வுக்கு உட்படுத்தினால் அதன் உண்மை நிலையைக் கண்டுகொள்ளவும், தவறுகள் இருந்தால் சரிசெய்யவும் முடியும். இது ஒவ்வொருவருடைய கிறிஸ்தவ வாழ்விலும் பொருந்தும். எனவேதான் ஆண்டவர் நமக்கும் அழைப்பு விடுக்கின்றார். நாம் பெற்றுக்கொண்ட அழைப்பில் நிலைத்திருக்க இது உதவும். ஒவ்வொருவரும் தம் செயல்களை ஆய்ந்து பார்க்கட்டும் கலாத்தியர் 6:4 இன்படி தன்னைப்பற்றி ஆராயாமல் பிறரைப் பார்ப்பதும், அவர்களது செயல்களை விமர்சிப்பதும், வர்ணிப்பதும் நம்மில் அனேகரில் காணப்படும் கெட்ட குணமாகும்.

வேறொருவருடைய செயல்களை சோதித்துப் பார்ப்பதனால் நமக்கு பலன் என்ன? நம்முடைய சுய செயல்கள் எமது வேதத்துடனும் இயேசுவுடனும் ஒப்பிட்டு சோதித்துப் பார்த்தால் நமக்கே எம்மை நல்ல வழியில் வளர்க்கும் படிகளாக அது மாற்றும். புலம்பல் 3:40 வசனத்தின் படி நம் வழிகளை ஆய்ந்தறிவோம். ஆண்டவரிடம் திரும்புவோம். ஆம் நம்மை நாமே சோதித்து அறிவதன் பிரதான நோக்கம் ஆண்டவரிடத்தில் திரும்பவே இதனால் பல ஆசீர்வாதங்கள் நம்மீது பொழியப்படும். ஆண்டவர் எம்மைக் குணமாக்குவார். தாமதிக்காமல் ஆண்டவரிடத்தில் எம் ஒவ்வொருவரையும் ஒப்படைப்போம். அவரின் வார்த்தைகளைக் கடைப்பிடித்து கடவுளின் பிள்ளைகளாவோம்.

**திருமதி. சறோஜினி சிறில்பத்திநாதன்**

# இயேசு கற்பித்த இறைவேண்டல்

அருட்பணி அ. அ. நவரெத்தினம் (நவாஜி)

கத்தோலிக்க திருமறையின், ஏன் உலகு வாழ் அனைத்து கிறிஸ்தவர்களினதும் இறைவேண்டலாகப் போற்றப்படுவது இயேசு கற்பித்த செபமாகும். விவிலியப் புத்தகத்தின் மத்தேயு மற்றும் லூக்கா நற்செய்திகள் இயேசு கற்பித்த இறைவேண்டல் பற்றிய பகுதியினைக் கொண்டுள்ளன. ஆயினும் அவை இரண்டும் இரண்டு வெவ்வெறு பின்னணியில் அங்கு சொல்லப்பட்டிருப்பது நோக்கத்தக்கது. மத்தேயு நற்செய்தியில் இயேசுவின் மலைப்பொழிவு போதனையின் ஒரு பகுதியாக, கிறிஸ்தவ (ஒழுக்கத்தின்) வாழ்வின் மூன்று பிரதான பண்புகளாகிய இறைவேண்டல், நோன்பு, தர்மம் புரிதல் என்பனவற்றின்கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளமை நோக்கத்தக்கது (காண்க: மத்தேயு 6:1-18). லூக்கா நற்செய்தியில் திருத்தூதர்கள் இயேசு இறைவேண்டலில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும்போது அவரை அணுகி, அவரிடம் திருமுழுக்கு யோவான் தன் சீடர்களுக்கு செபிக்கக் கற்றுக்கொடுத்தது போல தங்களுக்கும் செபிக்கக் கற்றுத்தருமாறு விடப்படுகின்ற விண்ணப்பத்திற்கு பதிலளிப்பதாய் அமைகிறது (காண்க: லூக்கா 11:1-4). லூக்கா நற்செய்திற்கு வழங்கப்படும் இன்னுமொரு பெயர் இறைவேண்டலின் நற்செய்தியாகும். இயேசு தன் சீடர்களுக்கு செபிக்கக் கற்றுக் கொடுத்ததன் பிற்பாடு உள்ள இறைவேண்டலின் தன்மைகள் குறித்த பகுதிகள் இதனை உறுதி செய்கின்றன. இதனைவிட திருஅவையில் திருத்தூதர்களின் பாரம்பரிய கற்கைகள்



அடங்கிய நூலாகிய டிடாக்கே (Didache) பிரிவு 8:2 இலும் இயேசு கற்பித்த இறைவேண்டல் காணக் கிடக்கிறது.

இயேசு கற்பித்த இறைவேண்டலானது அனைத்து இறைவேண்டல்களினதும் மாதிரியாகக் கொள்ளப்படுகிறது. இயேசு கற்பித்த இறைவேண்டலானது இறைவேண்டலின் பள்ளி (பாடசாலை) என்று கொள்ளப்படுகிறது.

இவ்இறைவேண்டலானது உலகில் வாழ்கின்ற அனைத்து மாந்தரையும் கடவுளைத் 'தந்தை' என்று அழைப்பதன் வாயிலாக இணைக்கிறது. கத்தோலிக்க திருஅவையின் மறைக்கல்வி நூலானது தேர்த்தூலியனை மேற்கோள் காட்டி, இயேசு கற்பித்த இறைவேண்டலானது 'முழு நற்செய்தியின் தொகுப்பு' (Synthesis) என்கிறது (காண்க: கத்தோலிக்க திருஅவையின் மறைக்கல்வி, எண்கள் 2761 – 2777). இது மனித வாழ்வின் ஒவ்வொரு பகுதிகளையும் தொடுகிறது. அதாவது, கடவுளின் தூய்மை, அவரது அரசு, நமது நாளாந்த வாழ்வு, பரஸ்பர மன்னிப்பு, தீமைக்கு எதிரான நமது போராட்டம் என்று சொல்லிக்கொண்டே செல்லலாம். இதனை வேண்டுவதன் வாயிலாக கடவுளின் இரக்கத்திற்கும் நமது நம்பிக்கைக்கும் அருகில் கொணரப்படுகிறோம்.

திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் இறைவேண்டல் மறைக்கல்வியின்படி, "இறைவேண்டல் என்பது சில வார்த்தைகள், செயல்களின் கோர்வை கிடையாது, மாறாக, தந்தை இறைவனுடனான நெருக்கமான உறவிற்கான வழியாகும். இது இறைவனைத் தந்தைக்குரிய அன்பில், உறவில் அழைக்கக் கற்றுத் தருகிறது. இங்கே அதிகமான சொற்களைக் கொண்டு அடிக்கிக்கொண்டு செல்லத் தேவையில்லை" என்கிறார் (பொதுமக்களுடான சந்திப்பு, பெப்ரவரி 27, 2019). இயேசுகிறிஸ்து எது மனிதர்களாகிய எமக்கு அத்தியாவசியமாகத் தேவையென்று கற்றுத் தருகிறார். தந்தையாகிய இறைவனுடன் நாம் எளிமையான வார்த்தைகளில் உரையாடலாம். ஏனெனில் நாம் கேட்பதற்கு முன்னமே நமக்கு என்ன தேவையென்று அவருக்குத் தெரியும் (காண்க: மத்தேயு 6:8).

கத்தோலிக்க கிறிஸ்தவ மரபின், பாரம்பரியத்தின்படி இயேசு கற்பித்த இறைவேண்டலானது ஏழு மனுக்களைக் (petitions) கொண்டதாகும் (காண்க: கத்தோலிக்க திருஅவையின் மறைக்கல்வி நூல் 2803 – 2854). ஆயினும் மத்தேயு நற்செய்திப் பகுதியில் மாத்திரமே ஏழு மனுக்கள் காணப்படுகிறது. மறுபக்கத்தில் லூக்கா நற்செய்திப் பகுதியில் ஐந்து மனுக்கள் மாத்திரமே காணப்படுகிறது என்பது நோக்கத்தக்கது. இம்மனுக்கள் கிறிஸ்தவ நம்பிக்கையினை சுருக்கமாகத் தருகிறது. நம்பிக்கையாளர் தந்தை இறைவனுடன் கொள்ளும் உறவிற்கு வழிசமைக்கிறது. இந்த ஏழு மனுக்களும் ஏழு பெரிய தியானத்தின் கருப்பொருள்களாகும் என்கிறார் திருத்தந்தை பிரான்சிஸ் (அவற்றை குறித்து இனிவரும் நாட்களில் நோக்கலாம்).

இயேசுவின் மலைப்பொழிவு போதனையில், "கேளுங்கள், உங்களுக்குக் கொடுக்கப்படும், தேடுங்கள், நீங்கள் கண்டடைவீர்கள், தட்டுங்கள், உங்களுக்கு திறக்கப்படும்" என்று கற்பிக்கிறார் (மத்தேயு 7:7). மனித வாழ்வில் அனைவருக்கும் தேவைகளுண்டு. ஒவ்வொருவரின் தேவையும் தனியானதும், பிரத்தியேகமானதுமாகும். ஒருவரிடமிருந்து ஒருவருக்கு வேறுபட்டது. எனவே மனிதத் தேவைகளின் தொடக்கப் புள்ளியாக அமைவது இயேசுவின் இறைவேண்டலாகும். தொடக்ககாலத் திருஅவையின் முதன்மைத் தந்தையர்களுள் ஒருவராகிய புனித அகுஸ்தீனாரின் கூற்றின்படி: "திருப்பாடல்கள் கிறிஸ்தவ இறைவேண்டலின் முதன்மை உணவாகும் (அங்கே புகழ்ச்சி, நன்றி, வேண்டல், பரிந்துரை, பாதுகாப்பு என்று பல்வேறுபட்ட இறைவேண்டல்கள் உள்ளன). நீங்கள் விவிலியத்தில் படிக்கும் எல்லா இறைவேண்டல்களும் இயேசுவின் இறைவேண்டலில் உள்ளது. அவ்வாறு இல்லாதது இருக்க முடியாது" என்கிறார். மறுபக்கத்தில் மத்தியகால இறையியலாளர் புனித தோமஸ் அக்குவினாஸ் இயேசுவின் இறைவேண்டல் குறித்து பேசும்போது: "இயேசுவின் இறைவேண்டல் மிகவும் நேர்த்தியான இறை வேண்டல் ஆகும். இங்கே நாம் எமது தேவைகளை மட்டும் கேட்பதில்லை, அவற்றை எந்த ஒழுங்கில், வரிசையில் கேட்க வேண்டுமென்பதையும் அது மனிதருக்கு கற்றுத் தருகிறது" என்கிறார்.

இவ்வாறான வல்லமையும், மாட்சியும் பொருந்திய இயேசு கற்பித்த இறைவேண்டலை தினமும் செபிப்போம். திருப்பாடல் 119:147இல் "வைகறையில் நான் உம்மிடம் வந்து உதவிக்காக மன்றாடுகிறேன்" என்று கூறப்படுவதுபோல தினமும் இயேசு கற்பித்த இறைவேண்டலின் பொருள் புரிந்து மன்றாடுவோம். நம்பிக்கையின் திருப்பயணத்தில் இயேசுவின் இறைவேண்டலால் வலுப்பெறுவோம்.



# படித்ததில் பிடித்தது

சேவியர் அந்தோனி சே.ச

அடர்ந்த காடு.
மூன்று மரங்கள் தங்கள் கனவுகளைப் பகிர்ந்து கொண்டன:
முதல் மரம் சொன்னது:
'நான் மதிப்புமிக்க நகைப் பெட்டியாவேன்!'
இரண்டாம் மரம் சொன்னது:
'நான் அரசனைச் சுமக்கும் பல்லாக்காவேன்!'
மூன்றாம் மரம் சொன்னது:
'நான் வானுயர வளர்ந்து...
விண்ணைத் தொடுபவனாவேன்!'
கேட்ட இரு மரங்களும் கேலி செய்தன:
'இந்த மரத்துக்கு ஆசையைப் பாரு...
விண்ணைத் தொடுவானாம்;
இது நிறைவேற்ற முடியாத ஆசை!'
கேட்ட மூன்றாம் மரம் பக்குவமாய் சொன்னது:
'இது ஆசையில்லை இலட்சியம்.
ஆசை நிறைவேறாமல் போகலாம்
ஆனால், இலட்சியம் ஒரு நாள் நிச்சயம் நிறைவேறும்!'
ஒரு நாள்...
மூன்று மரங்களும்
வெட்டி எடுத்துச் செல்லப்பட்டன.



முதல் இரு மரங்களை தச்சர்கள்
உடனே தேர்ந்தெடுத்தனர்.
வேலையை ஆரம்பித்தனர்.



அவர்கள் கைகளில்...
நகைப் பெட்டியாக விரும்பிய மரம்...
சவப் பெட்டியானது.
பல்லாக்காக விரும்பிய மரம்...
மாட்டுத் தீவனத் தொட்டியானது.
விண்ணைத் தொட விரும்பிய
மூன்றாம் மரமோ...
நெடு நாளாய் அநாதையாய்
இருட்டறையிலேயே கிடந்தது.

நம்பிக்கையோடு காத்திருந்தது:
'ம்... விடியல் ஒரு நாள் வரும்!'
விடியல் வந்தது.



ஒரு நாள்...
தச்சன் வந்தான்.
மரத்தை வெளியே எடுத்தான்.
செதுக்க ஆரம்பித்தான்.
அழகான சிலுவையாக்கினான்.
அச் சிலுவை...
இயேசு சுமந்த சிலுவையானது!
வரலாற்றில் இடம் பிடித்தது!
கேள்விப்பட்ட சவப்பெட்டி
தீவனத் தொட்டிக்கு உடனே தகவல் அனுப்பியது:
'விண்ணைத் தொட விரும்பிய மரம்
விண்ணவனையே தொட்டுவிட்டது!'

**எதுவாக விரும்புகிறாயோ அதுவாகவே நீ!**

மாணவர் தீபம்

# என்றுமே மாறாத அன்பு

மடல் – 04

அன்பு மாணவ, மாணவியரே
வாசக நெஞ்சங்களே,



உன் பாதம் படாததால்
இன்னும் என்
இதய வீதிகள்
வெறிச்சோடி
கிடக்கின்றன
இறைவா.

மடல் 3 கட்டுரையைப் படித்திருப்பாய் என்று நினைக்கின்றேன். அக்கட்டுரையில் கடைசி வரி "கற்றுக் கொள்வதை ஒரு போதும் நிறுத்தாதே. ஏனென்றால் கற்றுத் தருவதை வாழ்க்கை எப்போதும் நிறுத்துவதில்லை. வாழ்க்கை முழுவதும் நீயும் நானும் கற்றுக்கொண்டே இருக்க வேண்டும்.

கல்வியில் முன்னேற்றம் காண தூய ஆவியானவரை பற்றிக் கொள். பதினைந்து நிமிடத்தை காலையிலும், இரவிலும் அவருக்காக ஒதுக்கி பிரார்த்தனை செய் நிறையப் பலன் உண்டு.

இரண்டாம் தவணைப் பரீட்சை ஒகஸ்ட் மாதத்தில் நடைபெற உள்ளது. அதற்காக படித்து ஆயத்தம் செய்தாயா? செய்திருந்தால் முதலாம் தவணையை விட இரண்டாம் தவணையில் அதிக புள்ளி பெறுவாய்.

பாடசாலை வகுப்பறையில் அல்லது நீ டியூசன் வகுப்பிற்குச் செல்வதாயின் ஆசிரியர் கற்பிக்கும் போது கவனம் இல்லாமல் மற்ற மாணவருடன் நீ கதைத்துக் கொண்டிருப்பதை நான் பார்க்கின்றேன். நீ சிரித்து பகிடி செய்து கொண்டு இருப்பதும் எனக்குத் தெரியும். ஆசிரியர் தரும் குறிப்புக்களையோ, வினாக்களையோ கூட ஒழுங்காக எழுதாமல் அலட்சியப்படுத்துகிறாய். வீட்டுவேலையாகப் பயிற்சிகளைக் கொடுத்தால் அதைச் செய்யாமல் வகுப்பறைக்கு வந்து பொய் வேறு பேசுகிறாய். "கொப்பி கொண்டு வரவில்லை", நேர சூசி மாறிவிட்டது" என்றெல்லாம் பொருந்தாத பதிலைக் கூறி தப்பி விடுகின்றாய்.

இவ்வாறு நீ செய்வது உன்னையே நீ ஏமாற்றுகின்றாய் என்பதை உணரவில்லையா? பாடசாலை வகுப்பறையிலும் இதைத்தான் செய்கின்றாய். பணம் கொடுத்து டியூசன் வகுப்பிற்குப் போயும் இதைத்தான் செய்கின்றாய் என்றால் அர்த்தம் என்ன? உனது பெற்றோரின் பணத்தை வீண்செலவு செய்கிறாய் என்றல்லவா தோன்றும். பெற்றோர் வாயைக்கட்டி வயிற்றைக்கட்டி அல்லவா உனக்கு டியூசன் வகுப்பிற்கு பணத்தைத் தருகின்றார்கள் என்பதை நீ உணர மாட்டாயா?

படிக்க வேண்டிய வயதில் படிக்காமல் நேரத்தை வீணடித்து நீ பெரியவன் ஆனதும் என்ன செய்யப் போகிறாய். இன்று எத்தனை பேர் தமது இளமையில் இவ்வாறான தவறை விட்டுவிட்டு இன்று கவலையடைகிறார்கள் தெரியுமா?

இந்த நிலையில் இருந்து நீ விடுபட வேண்டுமா? எல்லாவற்றையும் விட சிறந்த நெறி ஒன்று உண்டு. அது தான் மற்றவரை அன்பு செய்வது.

வேதாகம புத்தகத்தை எடுத்து 1 கொரிந்தியர் 13ஆம் அதிகாரத்தை கண்டிப்பாக வாசி. அன்பின் மகிமை அதில் ஆழமாக எழுதப்பட்டுள்ளது. அதைக் கவனமாகப் படித்து சிந்தித்துப் பார் "அன்பு" எனும் ஆயுதம் உன் வாழ்க்கையில் பெரும் மாற்றத்தைக் கொண்டு வரும்.

பூவின் மீது வண்டு
கொண்ட அன்பு - வசந்தம்
பிள்ளை மீது தாய்
கொண்ட அன்பு - பாசம்
அழகு மீது பெண்
கொண்ட அன்பு - மாயை
கல்வி மீது மாணவன்
கொண்ட அன்பு - கடமை
நீ அன்புள்ளவனாக என்று மாறுவாயோ
அன்று அனைத்திலும் வெற்றி பெறுவாய்



தொடரும்...

ஜோ. நோமன் பல்தஸார், ஓய்வு நிலை அதிபர்

# குழந்தைகளின் வளர்ச்சியில் பெற்றோர்கள்...

திருமதி. மேரிதிரேஸ் இரட்ணசோதி

குழந்தைகளின் ஒட்டுமொத்த வளர்ச்சியில் பெற்றோர்கள் முக்கிய பங்கு வகிக்கின்றார்கள் பெற்றோரின் சரியான வழிகாட்டுதல் குழந்தைகளின் தனித்திறனை வளர்க்க உதவும். வேலை, குடும்பப் பொறுப்புக்கள் என எத்தகைய நெருக்கடிகளுக்கு மத்தியிலிருந்தாலும் குழந்தைகளுடன் செலவிடுவதற்கு நேரம் ஒதுக்க வேண்டும்.

குழந்தைகள் வளரும்போது அவர்களின் அறிவாற்றல் வளர்ச்சியடையும். பெற்றோர்களின் நடவடிக்கைகளைப் பார்த்தே பிள்ளைகள் வளர்வார்கள் என்பதால் பொறுப்புணர்வுடன் செயற்பட வேண்டியது முக்கியமானது குழந்தைகளை உடன் இருந்து வழிநடத்திச் செல்வது அவர்களை சரியான வளர்ச்சிப்பாதையில் பயணிக்க வழிவகை செய்யும். அவர்களின் சிந்தனைகள் செயற்திறன்களை மேம்படுத்த உதவும். அதற்கு செய்ய வேண்டிய விடயங்கள் ஆன்மீக சிந்தனைகள், கடவுள் பற்று அறிவாற்றல் வளர்ச்சி, சமூக வளர்ச்சி, உடல் வளர்ச்சி, மனவளர்ச்சி, எதிர்கொள்ளும் சமூகச் சிக்கல்களை தீர்க்கும் திறன்களை மேம்படுத்திக் கொள்வார்கள்.

குடும்பத்தில் ஏற்படும் பிரச்சனைகளை பெற்றோர் எவ்வாறு கையாள்கின்றார்கள், எத்தகைய தீர்வை நாடுகிறார்கள் என்பன போன்ற விடயங்களை பிள்ளைகள் கவனிக்கிறார்கள். மற்றவர்களுடன் எவ்வாறு நடந்துகொள்வது, சமூகத்துடன் எத்தகைய தொடர்பை ஏற்படுத்திக்கொள்வது, சரியான நண்பர்களை எப்படித் தேர்ந்தெடுப்பது குழுவாக ஒன்றிணைந்து செயற்படும் விதம், போன்ற பல விடயங்களையும் கற்றுக் கொள்கின்றார்கள். ஆரோக்கியமாக இருப்பது உடற்பயிற்சி செய்வது, சரியான உணவுகளை உட்கொள்வது என பெற்றோரிடமிருந்து கிடைக்கும் சரியான வழிகாட்டுதல்கள் பிள்ளைகளின் வளர்ச்சியை மேம்படுத்த உதவும். இந்த விடயத்தில் பெற்றோரைத்தான் பிள்ளைகள் ரோல்மோடலாக கருதுகிறார்கள். என்பதனையும் கருத்தில் கொள்ள வேண்டும்.

பிள்ளைகள் தோல்விகளை ஏற்றுக்கொள்ளும் பக்குவம், ஒழுக்க நெறிகளை தவறாது பின்பற்றுவது பிறருடைய கருத்துக்களை செவிசாய்ப்பது ஆட்சேபனை இருப்பினும் மனம்நோகாதபடி விளங்கி புரியவைக்கும் விதம் போன்ற விடயங்களை பெற்றோரைப் பார்த்துத்தான் கற்றுக்கொள்கிறார்கள். அதற்கேற்ற மனப்பக்குவம் கொண்டவர்களாக மாறிவிடுகின்றார்கள்.



குழந்தையின் வளர்ச்சியில் தந்தையின் பங்கு முக்கியமானது. எந்தவொரு செயலை செய்வதாக இருந்தாலும் தந்தையின் செயற்பாட்டுடன் அதை ஒப்பிட்டுப் பார்ப்பார்கள். குழந்தைகள் மனதில் எழிதில் எதிர்மறை சிந்தனை குடிகொண்டு விடும். தாங்கள் ஆசைப்படும் விடயங்கள் தங்களுக்கு சாதகமாக அமையாவிட்டால் சட்டென்று மனமுடைந்து போய்விடுவார்கள். பிரச்சினைகளில் சிக்கிக்கொண்டால் அவற்றை எப்படி கையாள்வது என்பதை பக்குவமாக குழந்தைகளுக்குச் சொல்லி புரியவைக்க வேண்டும். சின்னச்சின்ன வீட்டு வேலைகளை குடும்ப பொறுப்புடன் செயற்படுவதற்கு அடித்தளமிட வேண்டும். பெற்றோர்கள் பிள்ளைகளுக்கு எல்லா நேரங்களிலும் பக்கபலமாய் இருக்கின்றீர்கள் என்பதனை உணர்த்திக்கொண்டே இருக்கவேண்டும். அப்போதுதான் பிள்ளைகளும் பொறுப்புணர்வுடன் செயற்படுவார்கள்.

# குழந்தை இயேசு ஆலயம் – உவர்மலை

உவர்மலை குழந்தை இயேசு ஆலய பங்கு இளைஞர் ஒன்றியத்தினால் நடாத்தப்பட்ட வருடாந்த கிரிக்கட் சுற்றுப்போட்டியில் 8ஆம் வலயமான பிரான்சிஸ்கோ வலயம் வெற்றிக் கிண்ணத்தைப் பெற்றுக் கொண்டது.



## புனிதர்களின் பாதையில்....

# புனித அந்தோனியார்

புனித அந்தோனியார் ஐரோப்பாவிலுள்ள போர்த்துகல் நாட்டின் தலைநகரான லிஸ்பன் மாநகரிலே 1195ஆம் ஆண்டு ஆகஸ்ட் 15ஆம் திகதி பிறந்தார். அவரது பெற்றோர்கள் மார்டின், மேரி இவர்களுக்கு மூன்றாவது பிள்ளையாகப் பிறந்தார். இவருக்கு பெர்டிணாண்டு மார்டின் தே பர்னாந்து என்று பெயரிட்டனர்.

கல்வியில் சிறந்து விளங்கிய இவர் ஆன்ம குருவைக் கலந்தாலோசித்து புனித அகுஸ்தின் துறவற சபையில் சேர்ந்தார். பின் கொயிம்ரா என்னும் இடத்திற்குச் சென்று குருத்துவக் கல்வி பயின்றார். 1219ஆம் ஆண்டில் தனது 24 வயதில் குருப்பட்டம் பெற்றார்.

மொராக்கொவில் வேத சாட்சிகளாக மரித்த ஐந்து பிரான்சிஸ்கன் சபையோரின் திருப்பண்டம் பெப்ரவரி 1220இல் கொண்டு வரப்பட்டது. இதைப்பற்றி சிந்தித்த பெர்டிணாண்டு தாமும் அவ்வாறே கிறிஸ்துவுக்காக வேத சாட்சியாக வேண்டும் என்று தணியாத் தாகம் கொண்டார். எனவே 1221ஆம் ஆண்டு புனித அகுஸ்தீன் சபையை விட்டு விலகி பிரான்சிஸ்கன் சபையில் சேர்ந்தார்.

பிரான்சிஸ்கன் சபையில் சேர்ந்த போதுதான் பெர்ணாண்டு என்ற பெயரை மாற்றி அந்தோனியார் மடத்தின் பெயரால் அந்தோனி என்ற புதுப்பெயர் எடுத்துக்கொண்டார். சிறிது காலம் ஆபிரிக்காவில் உள்ள இஸ்லாமியருக்கும் போதிக்கச் சென்றார். உடல்நிலை சரியில்லாததால் மீண்டும் இத்தாலிக்கே திரும்பினார். போர்லி என்னும் இடத்தில் அதிபரின் வேண்டுகோளுக்கிணங்கி அங்குள்ள பேராலயத்தில் மறையுரையாற்றினார். அன்று முதல் அந்தோனியார் மறையுரையில் புகழ்பெற்றார்.

அதன்பின் பதுவை நகரில் திருமறை சார்ந்த பணிசெய்து மறையுரையாற்றினார். அவரின் உரையைக் கேட்க ஆலயங்களில் இடம் கொள்ளவில்லை. கிறிஸ்தவ கோட்பாடுகளை விளக்கியும், அந்த நாட்களில் நிலவிய தப்பறைக் கொள்கைகளை எதிர்த்து போதித்தார். தாம் வாழ்ந்த காலத்திலும் இறப்பிற்குப் பின்னும் கடவுள் அளித்த கொடையினால் அனேக புதுமைகள் செய்தார். இதனால் கோடி அற்புதர் புனித அந்தோனியார் என்ற சிறப்புப் பெயரைப் பெற்றார்.

அந்தோனியார் அதிசயப் பண்புகள் மற்றும் அவர் புரிந்த புதுமைகள் பற்றி பல நிகழ்வுகள் உள்ளன. ஒருமுறை இவர் ரீமினி என்னும் கடற்கரை நகரில் போதித்ததைக் கேட்க சிலர் மறுத்தபோது மீன்கள் நீரின் மேல் வந்து இவர் கூறியதைக் கேட்டுக்கொண்டிருந்தனவாம். இன்னொருமுறை யூதர் ஒருவர் இயேசு நற்கருணையில் இருப்பதை மறுத்தாராம். ஆனால் பட்டினி போடப்பட்ட அவரது கழுதை அதற்குமுன் போடப்பட்ட புல்லைத் தின்னாமல் அந்தோனியார் கட்டளைக்கு கீழ்ப்படிந்து நற்கருணையின் முன் மண்டியிட்டு ஆராதித்ததாம்.

மற்றுமொரு புதுமை இவர் வாழ்ந்த காலத்தில் கடவுளுடைய கிருபையால் இவர் செய்த புதுமைகளால் ஈர்க்கப்பெற்று இவரை நாடிவருவோர் எண்ணிக்கை அதிகமானதால் துறவியர்கள் மடத்தில் அமைதிக்கு இடையூறு ஏற்பட்டதாம். இதன் பொருட்டு மடத்தின் தலைமை குரு இவர் புதுமைகள் செய்யத் தடைவிதித்தார். நாள் ஒன்றுக்கு 13 புதுமைகள் மட்டுமே செய்ய கட்டளையிட்டார்.

ஒரு நாள் இவர் அன்றைக்கு செய்யக்கூடிய 13 புதுமைகளையும் செய்து முடித்தபின் மாலையில் வெளியே உலாவச் சென்றார். அப்பொழுது உயரமான கட்டிடத்திலிருந்து ஒருவர் தவறி விழுந்தவேளையில் "அந்தோனியாரே என்னை காப்பாற்றும்" என்று



உதவிக்குரல் எழுப்ப இவர் அவரை வானத்திலேயே அந்தரத்தில் தொங்கவைத்தாகவும், அருகில் இருந்த மடத்திற்கு சென்று தலைமை குருவிடம் 14வது புதுமை செய்ய அனுமதி பெற்று அவரை தரையில் பத்திரமாக இறக்கினாராம். மற்றொரு புதுமையில், ஒரே நேரத்தில் அந்தோனியார் இரு இடங்களில் போதித்தகாவும் புதுமைகள் செய்ததாகவும் செய்தி உண்டு.

1231ஆம் ஆண்டு பல ஊர்களில் மறையுரை ஆற்றியதாலும், கடும் தவ முயற்சிகளாலும் நோய்வாய்ப்பட்டார். அதே ஆண்டில் யூன் மாதம் 13ஆம் நாள் இறுதி திருவருட்சாதனங்களைப் பெற்றபின் இறந்தார். அப்போது அவருக்கு வயது 36. அதன் பின் 32 ஆண்டுகளுக்குப் பின் (1263) அவருடைய கல்லறையானது தோண்டப்பட்டு அவருடைய நாக்கு மட்டும் அழியாமல் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. அந்த நாக்கு இன்றும் பதுவை நகர் கோவிலில் பாதுகாக்கப்பட்டு வருகிறது. அந்தோனியார் இறந்து ஓராண்டு நிறைவிற்கு முன்னரே அவர் புனிதர் என்று திருஅவையால் அறிவிக்கப்பட்டார்.

1946ஆம் ஆண்டு திருத்தந்தை 12ஆம் பத்திநாதர் புனித அந்தோனியாரை திருஅவையின் மறைவல்லுநர்களில் ஒருவராக அறிவித்தார்.

# மருதமடு அன்னையின் வரலாறு

ஒல்லாந்தர் இலங்கையை ஆண்ட காலப்பகுதியோடு தான் மடுத்திருப்பதியின் வரலாறு ஆரம்பமாகின்றது. மன்னாரில் இருந்து 10 கிலோ மீற்றர்களுக்கு அப்பால் இருக்கும் மாந்தை என்ற கிராமத்தின் ஆலயம் தான் மடு மாதா திருச்சரூபத்தின் ஆதி இருப்பிடமாகும். 'செபமாலை மாதா' என்று அழைக்கப்பட்ட அந்தத் திருச்சரூபம் தான் இன்றைய மடுமாதா.

ஒல்லாந்தருடைய ஆட்சியில் கத்தோலிக்கருக்கு எதிராகக் கொடூரமான வேத கலாபனை ஆரம்பித்தது. இந்தக் கலாபனையில் இருந்து தங்களைக் காப்பாற்றும் பொருட்டும், செபமாலை மாதாவின் திருச்சரூபத்தைப் பாதுகாக்கும் பொருட்டும் மாந்தை மக்கள் அங்கிருந்து புறப்பட்டனர். குருக்களின் துணையில்லாத அந்த வேளையில் மாந்தையில் இருந்த 20 பக்தியுள்ள குடும்பங்கள் செபமாலை மாதாவின் திருச்சரூபத்தைத் தூக்கிக்கொண்டு அடர்ந்த வன்னிக் காட்டிற்குள் புகுந்தனர். திசை தெரியாது அங்கும் இங்கும் அலைந்தனர். இறுதியாக 'மருதமடு' என்ற இடத்திற்கு எவ்வித ஆபத்தும் இன்றி மாதாவின் வழிநடத்தலோடு வந்து சேர்ந்தார்கள்.

இவ்வேளையில் யாழ்ப்பாண நகரில் ஒல்லாந்தருடைய வேதகலாபனை தொடர்ந்து கொண்டிருந்தது. எழுநூறு கிறிஸ்தவர்கள் மட்டில் தங்களைக் காப்பாற்றிக் கொள்வதற்காக யாழ்ப்பாணத்திலிருந்து வன்னிக்கட்டிற்குள் புகுந்தனர். அவர்கள் பூநகரியைக் கடந்து பயத்தோடும்,படபடத்தோடும் அடர்ந்த காட்டினுள் அலைந்து கொண்டிருந்தார்கள். ஏற்கவே அங்கு வந்திருந்த மாந்தைக் கிறிஸ்தவர்களோடு இவர்களும் சேர்ந்து அன்னையின் அரவணைப்பில் வாழ்ந்து வந்தார்கள்.

யாழ்ப்பாணத்திலிருந்து தப்பிவந்தவர்களில் போர்த்துக்கேய தளபதியின் மகளாகிய 'எலேனா' என்பவரும் ஒருவர். இவள்தான் முதன் முதலில் மடு அன்னைக்கு சிறிய ஆலயம் அமைத்தாள். இவளுடைய இந்த நற்செயலுக்காக கிறிஸ்தவர்கள் இந்த இடத்தை 'சிலேனா மருதமடு' என்று அழைத்தார்கள். இந்த இடம் தான் இன்றைய மடுத்திருப்பதி ஆகும்.

மடுத்திருப்பதியின் அற்புத ஆற்றல் உலகறிந்த விடயமாகும். மடு அன்னையின் பரிந்துரையால் பல அற்புதங்கள் நடைபெறுகின்றன. பொன் விளையும் பூமி என்று சொல்வார்களே! அதுபோலதான் மடு அன்னையின் ஆலயத்தில் உள்ள மண்கூட மருந்தாகத் திகழ்கின்றது. இந்த மண் அருள் நிறைந்த மண், ஆற்றல் நிறைந்த மண் இத்திருத்தல மண்ணுக்கு சிறப்பான பெருமை உண்டு. உலகின் எங்குமே இல்லாத ஒரு நடைமுறை இங்கு உள்ளது. இத்திருப்பதியின் வளாகத்திலிருந்து பெறப்படும் மண் ஆசீர்வதிக்கப்பட்டு பிரதான ஆலயத்தின்



ஒருமூலையில் அதற்கென அமைக்கப்பட்ட ஒரு தொட்டியில் வைக்கப்படுகின்றது. இந்த மண்ணை மக்கள் தம் வீடுகளுக்கு எடுத்துச் செல்கின்றார்கள் குணமளிக்கும் மருந்தாக இந்த மண்ணைப் பயன்படுத்துகின்றார்கள்.

பாம்பு தீண்டிய நிலையில் இங்கு கொண்டுவரப்படும் மக்கள் இப்பதியை அடைந்ததும். குணம் பெறுகின்றார்கள் என்பது மக்களின் ஆழமான நம்பிக்கையாகும். அன்னையின் அருகில் இருக்க அவளது பாதத்தில் அமர்ந்து தம் குறைகளைச் சொல்ல அவளது தாயன்பில் திழைத்திருக்க அவளது பிள்ளைகள் நாலா திசைகளில் இருந்தும் வந்து குவிகின்றார்கள். அன்னையின் ஆறுதலையும் பெற்றுக்கொள்கின்றார்கள்.

## திருத்தூதர் பணிகள்
## 01 – 04 அதிகாரங்கள்

- எல்லோரும் பங்குபற்றலாம்
- போட்டோ பிரதிகள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது
- அதிர்ஸ்டசாலி குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்படுவர்.

பரிசுகள் முறையே 1ஆம் பரிசு 700/= 2ஆம் பரிசு 500/= 3ஆம் பரிசு 300/=

**கேள்வி பதில்**

1. தூய ஆவியார் யூதாசைக் குறித்து தாவீது வாயிலாக முன்னுரைத்த மறைநூல் வாக்கு என்ன?

விடை:.............................................................................

2. பெந்தகோஸ்தே நாளில் பேதுருவின் அருளுரையைக் கேட்டு மனம் மாறியவர்களிடம் பேதுரு கூறியது என்ன?

விடை:.............................................................................

3. பேதுரு கால் ஊனமுற்றவரைப் பார்த்து கூறியது என்ன?

விடை:.............................................................................

4. தலைமைச் சங்கத்தார் "இயேசுவைப் பற்றி எதுவும் பேசவோ, கற்பிக்கவோ கூடாது" என்று யாருக்கு கண்டிப்பாகக் கட்டளையிட்டனர்?

விடை:.............................................................................

5. பெந்தகோஸ்து நாளில் தூய ஆவியாரின் வருகை எவ்வாறு காணப்பட்டது?

விடை:.............................................................................

**சரி, பிழை எழுதுக.**

6. "அக்கலிதமா" என்றால் "இரத்தநிலம்" எனப் பொருள் ஆகும். ( )

7. யூதாசுக்குப் பதிலாக பர்சபா தெரிவு செய்யப்பட்டார். ( )

8.கோவிலின் வாயிலில் கால் ஊனமுற்றவரை பேதுரு குணமாக்கினார். ( )

9. இறுதி நாள்களில் நான் மாந்தர் யாவர் மேலும் என் அவியைப் பொழிந்தருள்வேன் என யோவேல் மூலம் முன்னறிவிக்கப்பட்டது. ( )

10. கடவுள் யோவானிடம் உன் மரபினர் வாயிலாக மண்ணின் மக்களினங்கள் அனைத்தும் ஆசிபெறும் என்றார். ( )

**கோடிட்ட இடங்களை நிரப்புக.**

11. அவன் வீடு ________________! அதில் எவரும் குடிபுகாதிருப்பாராக என்றும் அவனது ________________ வேறொருவர் எடுத்துக் கொள்ளட்டும்.

12. இறுதி நாளில் ________________ யாவர் மேலும் என் ________________ பொழிந்தருள்வேன்.

13. நிலபுலன்களும் பிற ________________ உடையோர் அவற்றை விற்று அனைவருக்கும் அவரவர் ________________ பகிர்ந்தளித்தனர்.

14. உங்கள் கடவுளாகிய ஆண்டவர் உங்கள் ________________ என்னைப் போல் ஓர் ________________ தோன்றச்செய்வார். அவர் உங்களுக்குக் கூறும் ________________ நீங்கள் செவிசாயுங்கள்.

15. பூவுலகின் அரசர்களும் ________________ ஆண்டவருக்கும் அவர்தம் ________________ எதிராக அணிவகுத்து நின்றனர்.

பெயர் :.............................................................................

முகவரி :.............................................................................

தரம் :.............................................................................

பங்கு :.............................................................................

முடிவுத்திகதி 2024.09.21

## ஹாய் குட்டீஸ்
## திருவிவிலிய புதிர் போட்டி – 60
## எசாயா 25 – 29 அதிகாரங்கள்

1. ஏனெனில் நீர் நகரத்தைக் இப்படியாக்கினீர்; அரண் சூழ்ந்த பட்டணத்தைப் இப்படிச் செய்தீர்; அயல் நாட்டினரின் கோட்டை அது; இனி இப்படி இராது;

விடை:.............................................................................

2. என் தலைவராகிய ஆண்டவர் எல்லா முகங்களிலிருந்தும் இதைத் துடைத்து விடுவார்; தம் மக்களுக்கு ஏற்பட்ட நிந்தையை இங்கிருந்து அகற்றி விடுவார்;

விடை:.............................................................................

3. வானளாவ உயர்ந்து நிற்கும் உன் அரண்களை அவர் விழத்தள்ளி இப்படியாக்குவார். அவை புழுதியோடு புழதியாக இப்படியே ஆகும்.

விடை:.............................................................................

4. உம் நீதித்தீர்ப்புகள் இங்கு நிலைத்திருக்கையில் வாழ்வோர் இதைக் கற்றுக் கொள்வர். இவர்களுக்கு நீர் இரக்கம் காட்டினாலும் அவர்கள் இதைச் செய்யக் கற்றுக் கொள்வதில்லை.

விடை:.............................................................................

5. உம் பகைவர்களுக்காக மூட்டிய இது அவர்களை விழுங்கட்டும் ஆண்டவரே இவ்வாழ்வை நீர் எங்களுக்கு உரித்தாக்குவீர்.

விடை:.............................................................................

6. என்னோடு அவர்கள் இதை செய்து கொள்ளட்டும். என்னோடு அவர்கள் இதை செய்து கொள்ளட்டும்.

விடை:.............................................................................

7. இந்தக் காற்றின் நாளில் இந்தக் காற்றால் அவனைத் தூக்கி எறிந்தார்.

விடை:.............................................................................

8. இந்த நாட்டில் சிதறுண்டோரும், இந்த நாட்டுக்குத் துரத்தப்பட்டோரும் திரும்பி வருவர். இங்கு அவர்கள் ஆண்டவரை வழிபடுவார்கள்.

விடை:.............................................................................

9. அவர்கள் புறப்பட்டுச் செல்கையில் நிலைதடுமாறி வீழ்வர், நொறுக்கப்படுவர் இதில் சிக்குண்டு பிடிபடுவர்.

விடை:.............................................................................

10. பகைவன் பெருவெள்ளம் எனப் பாய்ந்து வந்தாலும் அவனால் எங்களை அணுக இயலாது. ஏனெனில் இதனை நாங்கள் எங்கள் புகலிடமாகக் கொண்டுள்ளோம்.

விடை:.............................................................................

11. சாவுடன் நீங்கள் செய்த இதுவும் முறிந்து போகும். பாதாளத்துடன் நீங்கள் செய்த இது நிலைத்து நிற்காது.

விடை:.............................................................................

12. உளுந்து இதனால் அடிக்கப்படுவதில்லை சீரகத்தின் மேல் இதை உருட்டப் படுவதில்லை ஆனால் இது கோலாலும் இது தடியாலும் தட்டியடிக்கப்படும்.

விடை:.............................................................................

13. அவர்களுடைய ஞானிகளின் இது அழிந்துபோம்! அவர்களுடைய அறிஞர்களின் இது மறைந்து போம்.

விடை:.............................................................................

14. இவர்கள் இல்லாதொழிவர், இவர்கள் இல்லாமற்போவர், இவர்கள் அழிந்து போவர்.

விடை:.............................................................................

15. உன்னைச் சுற்றிலும் இதனை அமைப்பேன் உன்னை இதனால் சூழ்ந்து வளைப்பேன் உனக்கெதிராய் இதனை எழுப்புவேன்.

விடை:.............................................................................

பெயர் :.............................................................................

முகவரி :.............................................................................

தரம் :.............................................................................

பங்கு :.............................................................................

முடிவுத்திகதி 2024.09.21

# சிறுவர்களுக்கான போட்டி

## படத்திலுள்ள 05 வித்தியாசங்களைக் கண்டுபிடித்தலும் நிறம் தீட்டலும்




படம் 01




படம் 02

- பாலர் முதல் தரம் 05 வரையுள்ள மறைக்கல்வி மாணவர்களுக்கு.
- திருமலைத்தீபத்தில் தரப்படும் படம் 01 ற்கு மாத்திரம் நிறம்தீட்டி படம் 02 இல் உள்ள வித்தியாசங்களைக் கண்டு பிடித்து படத்திலேயே குறிக்க வேண்டும்.
- போட்டோ பிரதிகள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.
- 1, 2, 3 ஆம் இடங்களைப் பெறுபவர்களுக்கு பரிசுகள் வழங்கப்படும்.

1 ஆம் பரிசு - 700/- 2 ஆம் பரிசு - 500/- 3 ஆம் பரிசு - 300/-

பெயர் :....................

முகவரி :....................

தரம் :....................

பங்கு :....................

முடிவுத்திகதி 2024.09.21

## விடுபட்ட எழுத்துப் புதிர் போட்டி - 46

### நீதிமொழிகள் அதிகாரம் 16 - 18 வரை

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| க | | | | | | | | ■ | |
| ■ | | | | | | | | அ | |
| | | | | | | | நா | | |
| | பா | நே | | | | | | | |
| | | | | | | | நி | | |
| | | வெ | | | | | | | |
| | | | | | அ | | | | உ |
| | | | நி | | | | | | ■ |
| | | க | ■ | ஒ | | | தா | மெ | ■ |
| ஞா | நே | | | | | | | | |

1. க___ங்___ம___ற து
2. உ ள்___ண்___த் தை
3. நி___வே___ ___வா ய்
4. நே___ மை ___ன ந___த்___
5. அ___ ___ளி
6. மெ___ய றி___ள ர்
7. ஒ___து
8. வெ___யி___வே
9. க___மை
10. பா___ந்___டு___
11. ஞா___ம்___ர க்___ம்
12. நே___ய___ல் ல
13. தா___மை
14. நா___ட ங் ___ள்___ம்
15. நி___ய___
16. அ___ணா___ரு ப்___ன்

பெயர் :....................

முகவரி :....................

தரம் :....................

பங்கு :....................

முடிவுத்திகதி 2024.09.21

## சிறுவர்களுக்கான நிறம் தீட்டுதல் போட்டி முடிவுகள்

1 ஆம் பரிசு 700/= ரூபா
டனிக்ஷா
1ஆம் வட்டாரம் சல்லி
சாம்பல்தீவு
இறை இரக்க திருத்தலம்

2 ஆம் பரிசு 500/= ரூபா
ஜோடன்
இல. 24/5, கோணேசபுரம்
உவர்மலை
குழந்தை இயேசு ஆலயம்

3 ஆம் பரிசு 300/= ரூபா
கி. கனிஷயினி
புளியங்குளம்
இறை இரக்க திருத்தலம்

## புனித யோவான் நற்செய்தி அதிகாரங்கள் 13 – 16

1 ஆம் பரிசு 700/= ரூபா
சுவேக்கா
சுடரொளி ஒழுங்கை பாலையூற்று
லூர்து அன்னை திருத்தலம்

2 ஆம் பரிசு 500/= ரூபா
மேரி திரேசா
சந்தை வீதி, மூதூர் – 07
புனித அந்தோனியார் ஆலயம்

3 ஆம் பரிசு 300/= ரூபா
பென்டன்
ஆசிரியர் சதுக்கம், உவர்மலை
குழந்தை இயேசு ஆலயம்

## ஹாய் குட்டீஸ் திருவிவிலிய புதிர் போட்டி ~ 58
## எசாயா 15 ~ 19 அதிகாரங்கள்

1 ஆம் பரிசு 700/= ரூபா
சாம்றோய்
இல. 130/23, அலஸ்தோட்டம்
இறை இரக்க திருத்தலம்

2 ஆம் பரிசு 500/= ரூபா
நெ. டனிற் ஷரோன்
மின்சார நிலைய வீதி
உப்புவெளி

3 ஆம் பரிசு 300/= ரூபா
V. ஸல்விடோர்
இல. 29, ஆனந்தபுரி
இறை இரக்க திருத்தலம்

# மறைக்கல்வி நடுநிலைய நிகழ்வுகள்

மறையாசிரியர் தேர்வு 1,2,3 ற்கான கருத்தமர்வானது 08.06.2024 அன்று மறைக்கல்வி நடுநிலையத்தில் அருட்பணி. எமர்சன் றாகல் அடிகளாரின் வழிகாட்டலில் நடைபெற்றது.



பாடசாலை மாணவர்களுக்கான சமூக வலைத்தளம் தொடர்பான வழிகாட்டல் கருத்தமர்வானது திரு சுசிந்தன் றிக்லட் அவர்களால் 22.06.2024 அன்று மறைக்கல்வி நடுநிலையத்தில் நடாத்தப்பட்டது.



அருட்பணி. இக்னேஷியஸ் வருணகுலசிங்கம் அடிகளாரின் வழிநடத்தலின் கீழ் திருகோணமலை மறைமாவட்ட மறையாசிரியர்களுக்கான கருத்தமர்வானது 03.08.2024 சனிக்கிழமை மறைக்கல்வி நடுநிலையத்தில் நடைபெற்றது.



## புனித சதாசகாய அன்னை ஆலயம் – அன்புவழிபுரம்

திருகோணமலை மறைமாவட்டத்தில் அனைத்துப் பங்குகளிலும் உள்ள மரியாயின் சேனை அங்கத்தவர்களால் ஆச்சேஸ் விழாவானது 08.05.2024 அன்று அன்புவழிபுரம் புனித சதாசகாய அன்னை ஆலயத்தில் சிறப்பாக கொண்டாடப்பட்டது.



## துயர் பகிர்கிறோம்

**அமரர். திருமதி. அஞ்சலீனா கலாவதி எலாயஸ்**

பிறப்பு – 1946.10.05

இறப்பு – 2024.06.22



**திருகோணமலை மறைமாவட்ட மறைக்கல்வி நடுநிலைய இயக்குனர் அருட்பணி. அ.அ. றொஹான்பேணார்ட் அடிகளாரின் தாயார் ஆவார்.**